KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா மூன்று.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 5.] 1932 ஞு அக்டோபர் மீ 27உ [No. 42

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 821
2. தமிழ்ப்பாடம்
நளவெண்பா - கலிதொடர்காண்டம் 823
3. குடிவாழ்க்கை (Plato's Republic)
K. இராஜகோபால் 825
4. நம்மாழ்வார் வைபவம் (3-ம் பத்து, 10-ம் தசகம்) K. இராஜகோபாலாச்சாரியார் B.A., B.L., 827
5. அப்பர் (64 கலைகள்—தர்க்கம்)
E. N. தணிகாசல முதலியார் B.A B.L. 829
6. செந்தமிழ்ச் செல்வி (பாட்டு)
நவாலி. க. சோமசுந்திரம் பிள்ளை 832
7. திருக்குறள் நீதி
A. இராமலிங்கம் 833
8. பொதிகைநிகண்டு (செயல் பற்றிய பெயர்த்தொகுதி) S. வையாபுரிப் பிள்ளை B.A. B.L. 834
9. வர்த்தமானம் 839

கலாநிலயம்

அளவுடை யறிவு.

வாழ்வாங்கு வாழ்பவர்தம் மனத்தின் மாண்பு எவ்வண்ணத்த தாகுமென்பதை முன்னர்ப் பல தலையங்கங்களில் முயன்றுரைத்திருக்கின்றோம். அவ்வுரைகள், உள்ளத்துறையுந் தத்துவப் பெருமையைத் தெரிவிக்குஞ் சால்புடையன. தவத்திற்குரிய உருஇதுவென த்திருவள்ளுவரனைய வாய்மையாளர்களால் உரைக்கப்பெறலாம். மற்று, தத்துவஉணர்வின் உருத்தான் யாதென்று யாரே இயம்பத்தானும் முயலவல்லார் ?

ஆயினும், தத்துவ உணர்வு உடைத்தாயிருத்தல் வேறு, மலையிலக்கான மயக்கங்களினின்று விலகி நிற்றல் வேறு. முன்னையது ஓர் உடன்பாட்டுநிலை, பின்னைய நிலையின் தன்மை எதிர்மறையே. பகைஞர் அல்லாதார் எல்லாரும் நட்பினர்தாம் அல்லர். நட்பென்பது ஓர் உடன்பாட்டு நிலை. பகையும் நட்பும் அல்லாத நொதுமலும் இருத்தற்பாலது. அஃதேபோன்று, பொய்யினைப் பொய்யென்றறிந்து ஒருவன் கைவிதிர்த்த பின்னரும், மெய்யினைத் தெரிந்து பற்றிக்கொளாததோர் நிலைமையும் இருத்தற் கியலலாம். (பொருளல்லவற்றைப் பொருளாகக் கொள்ளுமோர் தன்மையையே இங்குப் பொய்யென்று அழைக்கின்றோம்). ஆக்கைக்கிரைதேடும் ஆரவாரங்களை வாழ்க்கையாமென இருந்தேங்கல் பொய்மயக்குற்ற நிலை. களியாட்டயர்வதில் இன்பமுளதென் றெண்ணல் பொய்மயக்குற்ற நிலை. பொருளால் வருவதாம் இன்பமெனப் புகலாமற் புகல்வதெல்லாம் பொய்மயக்குற்ற நிலை. நிச்சயம்போல் இவ்வாழ்வை, நினையாமல் நினைத்திருந்து விவகரிக்குஞ் சூழ்ச்சியெல்லாம் பொய்மயக்குற்ற நிலை. இவையனைத்தும் பச்சைப் பொய்கள். இந்நிலையில் இருப்பவர்தம் உருவும் உரையும் கருமமும் இருக்குமாறு அறிந்து கொள்ளல் அருமையன்று.

இத்தகைய பொய்களினின்று நீங்கினவர் ஆங்காங்கு இரண்டொருவர் இருப்பார். ஆயினும் இப்பொய்ந்நிலையை விட்டபடியாற்றானே, மெய்ந்நிலையைத் தொட்டபடியாமோ என்றோர் ஐயம் எய்துதல் இயற்கையே. மெய்ந்நிலையைப் பற்றினாலன்றிப் பொய்ந்நிலையினின்று நம்மைப் பறித்துக்கொள்ள இயலாதென்று உரைப்பவர்தம் வாய்மையை யாமிங்கு அயிர்க்கவுமில்லை, ஆராயவுமில்லை. அது வேறு விடயம். அம்மெய்ந்நிலையை எட்டியவர்தம் ஒழுக்கத்தின்உருவம்எவ்வகை இலக்கணத்திற்கும்அடங்காமல் கடந்திருக்கவும் இருக்கலாம் என்பதே யாம் இங்குக் கருதிக்கொளற்குரியதாய் நிற்கின்றது. பொய்மயக்குற்றவர் வழக்க மென்பன சில இம் மெய்ந்நிலயடைந்தவர் ஒழுக்கத்திற் காணப்பெறினும் பெறலாம். மேனகையூட்டிய மையலுக் குடைந்தான் மாதவத்தொரு கோசிகன். அரசன்பால் வைத்த ஆசையால், கைகேசியைக் கடிந்துரைப்பான் வசிட்டன். காமமும் வெகுளியும் மயக்குடைய பொய்யினை இயக்குவதன்றியும் மெய்யுடைய நிலையினிடை இயங்கவும் காண்கின்றோம். இதுபற்றியே, கோசிகனையும் வசிட்டனையும் பொய்ந்நிலையில் புக்குழலும் மக்களெனப் புகலோம்; மற்று, மெய்ந்நிலையை யுணராத ஐயரென யாரறைவார்.

எனினும், பொய்ந்நிலையினின்று தெளிந்துவருகின்ற ஒரு மனிதனுக்குரிய அடையாளங்களைப் பெரும்பாலும் வரையறுத்துரைக்க இயலும். இன்னதோர் தன்மையனைக் கிரேக்க அறிஞர் அரிஸ்டாடல் என்பவர், மேனிலை டைந்த மனிதன் என அழைக்கின்றார். அழைத்து, அவன் நடத்தையும், அந்நடத்தையை இயக்கும் அவன் மனத்தின் அமைப்பும் எவ்வண்ணம் இருக்குமெனப் பின்வருமாறு விளக்குகின்றார்:-

" He does not expose himself needlessly to danger, since there are few things for which he cares sufficiently; but he is willing in great crises, to give even his life—knowing that under certain conditions, it is not worthwhile to live. He is of a disposition to do men service though he is ashamed to have a service done to him. To confer a kindness is a mark of superiority; to receive one is a mark of subordination......He does not take part in public displays.

He is open in his dislikes and preferences; he talks and acts frankly, because of his contempt for men and things....He is never fired with admiration, since there is nothing great in his eyes. He cannot live in complaisance with others except it be a friend; complaisance is the characterestic of a slave......

He never feels malice and always forgets and passes over injuries. He is not fond of talking...It is no concern of his that he should be praised or that others should be blamed. He does not speak evil of others, even of his enimies unless it be to themselves. His carriage is sedate, his voice deep, his speech measured; he is not given to hurry for he is concerned only about a few things. He ia not prone to vehemence for he thinks nothing very important. A shrill voice and hasty steps come to a man through care...

He bears the accidents of life with dignity and care, like a skilful general who marshals his limited forces with all the strategy of war. He is his own best friend, and takes delight in privacy whereas the man of no virtue or ability is his own worst enemy and is afraid of solitude. "

இதன் மொழி பெயர்ப்பு வருமாறு:—

[தன்னுடைய கருத்தைக் கவரக்கூடிய விடயங்கள் மிகச் சிலவேயானதால் உயர்நிலையடைந்த உண்மை மனிதன் அனாவசியமாய்த் தன்னை ஆபத்திற்குள்ளாக்கிக்கொள்ளமாட்டான். எனினும் அரிய பெரிய சமயங்களில் தன் உயிரையும் விடச் சித்தமாயிருப்பான். ஏனெனில் சில நிலையினில் உயிரைக் காப்பது பயனற்றது என்பதை அவன் அறிவான். மாந்தருக்கு எப்பொழுதும் உதவும் தன்மையன், ஆனால் பிறரிடமிருந்து தானோர் உதவிபெற நாணுவான். பிறருக்கு அன்புடன் ஒன்று செய்வது மேன்மையின் அடையாளம்; பிறரிடமிருந்து ஒன்று பெறுவது தாழ்மையின் அடையாளம்....பலர் காணப் பகட்டும் காட்சிகளில் அவன் கலக்கமாட்டான். தான் ஒன்றினிடம் காட்டும் விருப்பையும், மற்றொன்றினிடம் காட்டும் வெறுப்பையும் அவன் மறைக்கவும் மாட்டான். மனிதனிடத்திலும் விஷயங்களினிடத்திலும், நன்மதிப்பு அதிகம் இல்லாதவனாதலால் அவன் சொல்வதிலும் செய்வதிலும் வெளிப்படையாயிருப்பான். அவன் கண்களுக்கு எதுவும் பெரியதன்று. எனவே எதுவும் அவனை ஆச்சரியப்படச் செய்யாது. நண்பனைத் தவிர மற்றெவரோடும் அவன் இணங்கியிருக்கமாட்டான். அடிமைகளே அனைவர்க்கும் இணங்கிவாழ்வார். வன்மமென்பது அவனிடம் இராது. தனக்குச் செய்யப்பெற்ற தீமைகளை மறந்துவிடுவான். தான் எல்லோராலும் புகழப்படவேண்டுமென்றேனும் பிறர் பழிக்கப்படவேண்டுமென்றேனும் அவன் கருதுவதில்லை. தன் பகைவரையும் அவன் பழித்துப் பேசமாட்டான். அவர்களை நேரில் கண்டக்கால் உற்றது சொல்லி இடித்துரைப்பானே யன்றிப் புறத்தில் ஒன்றுங் கூறமாட்டான். அவன் நடையில் அமைதி இருக்கும், அவன் பேசுவதில் ஆழமிருக்கும், அவன் வார்த்தைகள் அளவுடையனவாயிருக்கும். அவனிடத்தில் அவசரம் என்பது கிடையாது. ஏனெனில், அவன் கருத்திற்குரியன மிகச் சில விடயங்களே. வன்மையுடனும் பரபரப்புடனும் அவன் பேசும் தன்மையன் அல்லன். ஏனெனில் எதையும் பெரியதொரு பொருளாக அவன் மதிப்பதில்லை. கீச்சுக் குரலும், அவசர நடையும் கவலையினால் வருபவை. சிறு சைனியத்தையுடைய ஒரு இராணுவத்தலைவன் எப்படிச் சந்தர்பத்திற்குத் தக்கவாறு படையினை நடத்துகின்றானோ, அவ்வாறே, வாழ்க்கையில் வந்தடையும் இடர்களைப் பெருமையுடன் நயம்பட ஏற்றுச் சந்தர்பத்திற்குத் தக்கவாறு தன்னை நடத்திக்கொள்பவனாவான். தனக்கு நல்லவொரு நண்பன் தானே யாதலின் தனியே இருந்து உவப்பவனாவான். மற்று, நற்குணமும் திறமையும் இல்லாதவர் தமக்குத் தாமே பெரும் பகையாதலின் தனியேயிருக்க அஞ்சுகின்றார்.]

நுண்ணிய காட்சியாலன்றி இவ்வடையாளங்களின் அமைதியைக் காணலருமை. அரிஸ்டாடல் போன்றவோர் பேரறிஞரே இத்துணைச் செவ்வியின் இவ்வடையாளங்களை எடுத்தியம்புதற்கியலும். இது அறிவுடையளவு. ஆயினும் அவ்வளவில் நின்றுவிடும் மக்கள் அளவுடை யறிவினர்களே.

நிற்க, இந்தச் செவ்வியில் ஒன்றிங்கு உணர்தற்குளது. பலருடன் கூடிக் கலகலவென்னாமல் தனியேயிருந்து உவக்குந்தன்மை மேன்மைக் கறிகுறி என்று அரிஸ்டாடல் கூறுமிது, "தனியே இருப்பதற் கெண்ணினேன் எண்ணமிது சுவாமி நீயறியாததோ" என்று தாயுமானவர் வேண்டிய வரத்தினை நினைவூட்டும். தியானநிலை கைகூடுவதற்குத் தனிமை வேண்டப்படுவதாவதுடன், மேன்மேல் வளர்ந்துயர்கின்ற மனிதனது மனம் தனிமையை நாடுவதன் காரணத்தை ஆர்தர் ஷாபன்ஹார் (Arthur Schopenhaur) என்னும் ஜர்மனிய வித்தகர் வகுத்துரைத்திருக்கும் மொழிகள் மிகச்சுவையுடையன. அதன்கண்ணும் அளவுடையறிவின் தன்மையை நன்கு காணலாம்:—

The more a man has in himself, the less others can be to him. The feeling of self-sufficiency ! it is that which restrains those whose personal value is in itself great riches, from such considerable sacrifices as are demanded by intercourse with world, let alone, then, from actually practicing self denial by going out of their way to seek it. Ordinary people are sociable and complaisant just from the very opposite feeling; to bear others company is easier for them than to bear their own. Moreover respect is not paid in this world to that which has real merit; it is reserved for that which has none. So retirement is at once a proof and a result of being distinguished by the possession of meritorious qualities. It will therefore show real wisdom on the part of any one who is worth anything himself, to limit his requirements, as my be necessary in order to preserve or extend his freedom and,—since a man must come into some relations with his fellow-men-to admit them to his intimacy as little as possible.

I have said that people are rendered sociable by their inability to endure solitude, that is to say their own society. They become sick of themselves. It is this vacuity of mind which drives them into inter course with others,—to travel in foreign countries. Their mind is wanting in elasticity; it has no movement of its own and they try to give it some—by drink for instance. How much drunkenness is due to this cause alone. They are always looking for some form of excitement, of the strongest kind they can bear—the excitement of being with people of like nature, and if they fail in this, their mind sinks by its own weight, and they fall into a grievous lethargy. Such people, it my be said, possess only a small fraction of humanity in themselves; and it requires a great many of them put to gether to make up a fair amount of it,—to attain any degree of consciousness as men. A man, in the full sense of the word,—a man par excellence—does not represent a fraction, but a whole number; he is complete in *himself*.

தமிழ்ப் பாடம் 42.

நள வெண்பா—கலிதொடர் காண்டம்

[805-வது பக்கத் தொடர்ச்சி]

போயொருகால் மீளும் புகுந்தொருகால் மீண்
ஆயர் கொணர்ந்த வடுபாலின்—தோயல்[டேகும்
கடைவார்தங் கைபோலு மாயிற்றே காலன்
வடிவாய வேலான் மனம். 103.

பதப்பிரிவு:—போய் ஒருகால் மீளும் புகுந்து ஒரு கால் மீண்டு ஏகும் ஆயர் கொணர்ந்த அடு பாலின் தோயல் கடைவார்தம் கை போலும் ஆயிற்றுஏ காலன் வடிவு ஆய வேலான் மனம்.

அன்வயம்:—காலன் வடிவு ஆய வேலான் மனம், ஆயர் கொணர்ந்த அடுபாலின் தோயல் கடைவார்தம் கை போலும் ஆயிற்று. (எனவே அவன்) போய் ஒரு கால் மீளும், புகுந்து ஒருகால் மீண்டு ஏகும்.

பதவுரை.

காலன் - எமன் போன்ற
வடிவு ஆய - தோற்றத்தை உடைய
வேலான் - வேலை ஏந்திய நளனுடைய
மனம் - மனமானது,
ஆயர் - இடையர்கள்
கொணர்ந்த - கொண்டுவந்த
அடு - காய்ச்சிய
பாலின் - பாலினது
தோயல் - தயிரை
கடைவார்தம் - கடைகின்றவர்களுடைய
கை போலும் - கைகளைப்போல்
ஆயிற்று - ஆயிற்று; (ஆதலால் அந்நளன்)
போய் - (அப் பாழ்மண்டபத்தை விட்டு)போய்
ஒருகால் - ஒருமுறை
மீளும் - (மண்டபத்திற்கு) வருவான்.
புகுந்து - (அவ்வாறு மண்டபத்துள்) புகுந்து
ஒருகால்-ஒருமுறை
மீண்டு - மறுபடியும்
ஏகும் - போவான்.

இவ்வாறு அவன் அங்குப் பலமுறை வருவதும் போவதும் ஆயினன்.

விரிவுரை:—நளனுடைய கையில் இருந்த வேலானது,பார்த்தமாத்திரத்தில் இனிச்செத்தோம்என்னும் அச்சம் விளைப்பதால்,பகைவர் கண்களுக்கு எமனைப் போல் தோன்றும், என்ற கருத்தில் 'காலன் வடிவாய வேலான்,' என்று கவி அவனைக் குறிக்கின்றார்.

தயிரைக் கடைகின்றவர் கைகள்நெருங்கியபாடுமில்லாமல் அகன்றபாடுமில்லாமல் வருவதும் போவதுமாயிருக்குமாதலால் அவை, தமயந்தியைவிட்டுப் பிரியச் சகியாமல் அவளோடு இருந்துவிடுவதென்று ஒரு போதும், அவளுடைய நன்மையைக் கருதுங்கால் போவதே நலமென்று மறுபோதும் மாறிமாறி நினைந்து அலைகின்ற நளனுடைய மனதிற்கு உவமையாயின.இன்னபடி ஒருபால்படாத உள்ளத்தவனாய் இருந்தான் ஆதலால் அவன் அவளைப் பாழ்மண்டபத்தில் விட்டகல்வதெனின் அகலாமல் அவளோடு இருப்பதெனின் இருக்காமல், அங்கு வருவதும் மீண்டு போவதுமாய் நெடுநேரம் உழன்றிருந்தான்.

குறிப்பு:—மீளும் ஏகும் என்னுமிச் சொற்களுக்கு, மீள்வான்,ஏகுவான்என்று இங்குப்பொருள்கொள்ள வேண்டும். இவ்விதமே, செய்யும், என்பதுபோல் முடிகின்ற வினைமுற்றுக்களெல்லாம், ஆண்பால் பெண் பால் ஒன்றன்பால் பலவின்பால் ஆகிய நான்கு பால் களுக்கும் பொதுவாய்ச் செய்யுள்களில் வரும். எழுந்திருக்கும், விழுந்திருக்கும், சேர்க்கும், என்று முன் (சுயம்வர காண்டம், 109-வது செய்யுள் 403-வது பக்கம்)பெண்பாலுக்கு, செய்யும் என்னும் இவ் வாய்பாட்டு வினைமுற்றுக்கள் வந்திருக்கக் காணலாம். கிளி பேசும், குதிரை ஓடும், என்று ஒன்றன்பாலிற்கு இந்த வாய்பாட்டு வினைமுற்றுக்கள் வழக்கத்திலும் வருவது யாவரும் அறிவர். மரங்கள் வளரும், நாய்கள் குலைக்கும், என்று பலவின்பாலுக்கும் வரலாம்; ஆனால் பலர்பாலிற்குமாத்திரம் வருவதில்லை. அவர்கள்வரும், மனிதர் இங்கு வாழும், என்று சொல்வது பிழை; அவர்கள் வருவார், மனிதர் வாழ்வார் என்றே கூற வேண்டும்.

சிந்துரத்தாற் றெய்வ முனிவர் தெரிந்துரைத்த
மந்திரத்தாற் றம்பித்த மாநீர்போல்— முந்த
ஒலித்ததேர்த் தானை யுயர்வேந்த னெஞ்சம்
வலித்ததே தீக்கலியால் வந்து. 104.

பதப்பிரிவு:—சிந்துரத்தால் தெய்வ முனிவர் தெரிந்து உரைத்த மந்திரத்தால் தம்பித்த மா நீர் போல் முந்த ஒலித்த தேர் தானை உயர் வேந்தன் நெஞ்சம் வலித்தது தீ கலியால் வந்து.

அன்வயம்:—சிந்துரத்தால் தெரிந்து தெய்வ முனிவர் உரைத்த மந்திரத்தால் தம்பித்த மாநீர்போல், முந்த ஒலித்த தேர்த்தானை உயர்வேந்தன் நெஞ்சம் வந்து தீக்கலியால் வலித்தது.

பதவுரை.

சிந்துரத்தால் - (கங்கையாறு தம்மை முழுக்க வருகின்ற தென்பதை ஐராவதம் என்னும்) யானையால்
தெரிந்து - அறிந்துகொண்டு [நாரத முனிவர்
தெய்வமுனிவர் -தெய்வத்தன்மை பொருந்திய
உரைத்த-சொன்ன
மந்திரத்தால் - மந்திரத்தால்
தம்பித்த - (பாயாமல்) நின்றுவிட்ட
மா - பெரிய
நீர்போல் - கங்கையின் நீரைப்போல,
முந்த - முதலாக
ஒலித்த - ஒலிசெய்த
தேர் - தேர்களின்
தானை - சேனையையுடைய
உயர் - மேலான
வேந்தன் - அரசனாகிய நளனது
நெஞ்சம் - மனம்
வந்து - (தமயந்தியின்பால் நாடாமல்) வந்து
தீ - கொடிய
கலியால் - கலியினால்
வலித்தது - வன்மையுற்றது.

விரிவுரை:—எப்பொழுதும் நீர்போல் இளகித் தமயந்தியின்பால் பாயும் தன்மையுள்ள நளனுடைய

மனம் இப்பொழுது கலி செய்த காரியத்தினால் அவளிடத்தில் செல்லாமல் தன்னிடத்திலேயே தம்பித்து நிற்கும் வன்மையைப் பெற்றது. இதற்கு உவமையாகப் புகழேந்திப் புலவர், நாரதர் ஓதிய மந்திரத்தால் கங்கை நீர் தம்பித்த கதையை இங்குக் குறிக்கின்றாரென்றும், அந்தக்கதை ஜைமுனி பாரதத்தில் காணப்படுகின்றதென்றும் உரையாசிரியர் கூறுகின்றனர். அது பின்வருமாறு:—நாரதமுனிவர் மற்றுஞ் சில முனிவர்களோடு கங்கையின் கரையை ஓரிரவு அடைந்து அங்கு நாராயணநாம பஜனையில் மெய்ம்மறந்திருந்தனர். அப்பொழுது, வந்த அம்முனிவர்கள், தன்னைப் பணிந்து துதித்திலர் என்னுங் கோபத்தால் கங்கைநதி வெள்ளம்புரண்டு அவர்களை முழுக்கிவிட வந்தது. பக்திப் பரவசமாயிருந்த முனிவர்கள் இது அறியாமல் இருப்பதைக் கண்டு, தேவேந்திரனுடைய ஆணையான ஐராவதம் அவ் வாற்றங்கரைக்கு வந்து நீர் குடிப்பதுபோல் பாவனைசெய்து சிறிது ஜலத்தை எடுத்து நாரதர்மீது தெளிக்க, அவர் கண்விழித்துப் பார்க்கவே எழுந்துவரும் அவ்வெள்ளத்தைக் கண்ணுற்று ஒரு மந்திரத்தைச் சொன்னார். உடனே அவ் வெள்ளம் பாயமுடியாமல் இருந்த இடத்திலேயே ஸ்தம்பித்து நின்றது. அப்புறம் அந்நதி தன்பிழை பொறுக்குமாறு நாரதமுனிவரைவேண்டி அவர் அருள் பெற்றுப் பழையபடி பாய்ந்தோடியது.

பாய்கின்ற வெள்ளம் நாரதர் மந்திரத்தால் அல்லாமல் ஸ்தம்பம்போல் நிற்க இயலாது. அவ்விதமே கலியின் செய்கையாலேயே நளன் மனமும் தமயந்தியினிடம் செல்லாத வன்மையைப் பெற்றது, என்பது இச்செய்யுளின் கருத்து.

தீக்கா னகத்துறையுந் தெய்வங்காள் வீமன்றன்
கோக்கா தலியைக் குறிக்கொண்மின்—நீக்காத
காதலன்பு மிக்காளைக் காரிருளிற் கைவிட்டின்
றேதிலன்போற் போகின்றேன் யான். 105.

பதப்பிரிவு:—தீ கானகத்து உறையும் தெய்வங்காள் வீமன்தன் கோ காதலியை குறிக்கொள்மின் நீக்காத காதல் அன்பு மிக்காளை கார் இருளில் கைவிட்டு இன்று ஏதிலன் போல் போகின்றேன் யான்.

பதவுரை.

நீக்காத - (என்னிடத்திலிருந்து ஒருபோதும்) [அகற்றாத
காதல் - காதலும்
அன்பு - அன்பும்
மிக்காளை - மிகுந்தவளாகிய தமயந்தியை
கார் - கரிய
இருளில் - இருட்டில்
கைவிட்டு - கைவிட்டு
ஏதிலன் போல் - சத்துருவைப்போல்
யான் - நான்
இன்று - இப்பொழுது
போகின்றேன் - போய்விடுகின்றேன்
(ஆகையால்)
தீ - கொடிய
கானகத்து - காட்டில்
உறையும் - வசிக்கின்ற
தெய்வங்காள் - தெய்வங்களே (நீங்கள்)
வீமன்தன் - வீமராஜனுடைய
கோ - சிறந்த
காதலியை - புத்திரியை
குறிக்கொண்மின் - கவனித்துக் காக்கும்படி
வேண்டிக் கொள்கின்றேன்.

விரிவுரை:—"காட்டிலே கொண்டுவந்து தன் மனைவியை விட்டுவிட்டுப் போகின்றவனைவிடக் கொடியவன் வேறொருவன் உண்டோ. மதியின்றி நான் ஆடிய சூதினால் இவளுக்கு அளவற்ற துன்பங்களை உண்டாக்கி யிருக்கின்றேன். அப்படி யிருந்தும் அவள் என்னிடத்தில் வைத்த அன்பையும் காதலையும் நீக்காமல் இன்னமும் முன்போலவே பாராட்டுகின்றாள். அன்னவளுக்கு நான், பகைஞன் செய்கின்ற காரியம் செய்கின்றேனே என்று என்மேல் கொண்ட வெறுப்பால் அவளை நீங்களும் கைவிடாதீர். 'என் மனைவி என்ற தன்மையில் அவளை நீங்கள் காக்கவேண்டும்' என்று அவளுக்கு நாயகனாக நான் உங்களைவேண்டிக் கொள்ளும் உரிமையை இழந்துவிட்டேன். ஆதலால் 'வீமராஜன்தன் செல்வமகள்' என்றவொரு நினைவு கொண்டு அவள் தந்தையைக் கருதியேனும் அவளைக் காப்பது உங்கள் கடன்" என்னுங் கருத்தோடு நளன் தமயந்தியை வனதேவதைகளிடம் கையடைத்துக் கொடுத்துவிட்டுப் போகின்றான்.

'காதல் அன்பு மிக்காளை' என்பதில் காதல் அன்பு என்னும் இரண்டும் ஒரே பொருளில் வந்த இரண்டு சொற்கள் என்றேனும், தான் ஒன்று பெறுவதற்கு ஆசைப்படுவதைக் காதல் என்றும், கொடுப்பதற்கு ஆசைப்படுவதை அன்பு என்றும் இரண்டாகவேனுங் கொள்ளலாம். அப்பொழுது, "என்னால் தனக்கும், தன்னால் எனக்கும் இன்பநலங்கள் பெருகவேண்டுமெனும் விருப்பம் மிகுந்தவள்" என்பது நளனுடைய கருத்தாகும். அல்லது, 'காதலின் அன்பு மிக்காள்' என்று கொண்டு, "என்னால் இன்பமும் நலனும் பெறவேண்டும் என்னும் கருத்தைக் காட்டிலும் எனக்கு இன்பமும் நலங்களும் அளிக்க வேண்டுமென்னும் விருப்பமே மிகுந்தவள்" என நளன் கருதி யியம்பினான், என்பதும் பொருந்தும்.

ஏந்து மிளமுலையா ளின்னுயிருந் தன்னருளும்
பூந்துகிலும் வேறாகப் போயினான்—தீந்தேன்
தொடைவிரவு நாண்மாலை சூட்டினா னன்னை
இடையிருளிற் கானகத்தே விட்டு. 106.

துகிலை அரிந்துகொண்டு நளன் தமயந்தியை விட்டுப் போயினான் என்பதை இச்செய்யுளும் அடுத்த செய்யுளும் கூறுகின்றன.

தாருவெனப் பார்மேற் றருசந் திரன்சுவர்க்கி
மேருவமைத் தோளான் விரவார்போல்—கூரிருளில்
செங்கா னகஞ்சிதையத் தேவியைவிட் டேகினான்
வெங்கா னகத்திலே வேந்து. 107.

நீல மளவே நெகிழ நிரைமுத்தின்
கோல மலரின் கொடியிடையாள்—வேல்வேந்தே
எங்குற்றா யென்னா வினவிளக்கை நீட்டினாள்
அங்குத்தான் காணா தயர்ந்து. 108

பதப்பிரிவு:—நீலம் அளவே நெகிழ நிரை முத்தின் கோலம் மலர்இன் கொடி இடையாள் வேல் வேந்தே எங்கு உற்றாய் என்னா இன வளை கை நீட்டினாள் அங்கு தான் காணாது அயர்ந்து.

அன்வயம்:—கோலமலரின் கொடி இடையாள், "வேல் வேந்தே, எங்கு உற்றாய்" என்னா இனவளைக்

கை நீட்டி, அங்குத்தான் காணாது, நீலத்தின் அள வே நிரைமுத்து நெகிழ, அயர்ந்தாள்.

பதவுரை.

கோலம் - அழகிய
மலரின் - மலர்களையுடைய
கொடி - கொடிபோன்ற
இடையாள் - இடையை உடைய தமயந்தி
(சிறிது நித்திரை தீர்ந்ததும் அயலில் நளன் இல்லாததால்)
"வேல் - வேலை ஏந்திய
வேந்தே - அரசனே,
எங்கு - எவ்விடம்
உற்றாய் - சென்றாய்"
என்னா - என்று,
இனம் - வரிசையாகிய
வளை - வளையல்களை அணிந்த
கை - கையை
நீட்டி - நீட்டி (தடவிப்பார்த்து)
அங்குத்தான் - அங்கும்கூட
காணாது - காணாமல்,
நீலத்தின் - நீலமலர்போன்ற அவள் கண்களின்
அளவு - முழுநீளமும்
நிரை - வரிசையாக
முத்து - முத்துக்கள்போன்ற கண்ணீர்த்துளிகள்
நெகிழ - உதிர
அயர்ந்தாள் - சோர்ந்தாள்.

குறிப்பு:—(1) நீலம், முத்து என்னும் இவ்விரண்டு சொற்களும் உவமையாகுபெயர்களாய்க் கண்ணையும் கண்ணீரையும் உணர்த்தின.

(2) வேல் வேந்து, என்பது வேலை ஏந்திய வேந்து என்று விரியுமாதலால், இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை. வளைக்கை, என்பதும் இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை; வளையை அணிந்த கை, என்று விரியும். வளை, என்பதன் இறுதியில் உள்ள ஐ, உருபு அன்று. சொல்லின் உருவமே வளை. இரண்டாம் வேற்றுமை ஆயின் வளையை, என வரும். கை நீட்டினாள், என்பது கையை நீட்டினாள் என்று உருபு மாத்திரம் விரியுமாதலால், இரண்டாம் வேற்றுமைத் தொகை.

குடி வாழ்க்கை

[Plato's Republic]

[808-வது பக்கத் தொடர்ச்சி]

ஒரு சமுகத்தின் அங்கங்களான பல்வேறு தொழிலினர் தத்தம் தொழிலினை முறையே செய்துவந்தாற் றான், அச்சமுகம் வன்மையுடனும் முழுமையுடனும் இருக்கும் என்றேன். அங்கங்களானோர் சமுகநலத்தை மேற்கொண்டு தங்கள் தங்கள் நெறியில் ஈடுபடுவதற்கு முதலும் முக்கியமுமான காரணமாவது கல்வி. நேரிய கல்வியினால் சமுகயந்திரத்தின் உருளை இயக்கப் படுமாயின் செவ்விய முறையில் அவ்வெந்திரம் தானாகச் சுழலும். தலைமுறைக்குத் தலைமுறை மாந்தர்தம் ஒழுக்கமும் உயரும். எனவே கல்வியும் கல்வி முறையும் நமது காப்பாளர்களால் நன்கு கவனிக்கப்பட வேண்டிய முதல்விஷயமாகும். கல்விமுறையில் மாறுதல்கள் ஒன்றும் செய்யலாகாது. உடற்பயிற்சியும் சங்கீதப் பயிற்சியும் பண்டை முறையிலேயே கற்பிக்கப் பட வேண்டும். அடிக்கடி கல்வி முறையில் மாறுதல்களைச் செய்வது ஒருசமுகத்தின் நல்வாழ்க்கை நிலைப்பதற் குரியதாகாது. "ஒரு நாட்டினது சங்கீதக்கலையினில் மாறுதல்கள் செய்வீர்களேல்,பிறகு சிறிது காலத்திற்குள் அந்நாட்டின் ஆட்சிமுறையினும் சட்டதிட்டங்களினும் மாறுதல்கள் செய்யவேண்டி நேரிடும்" என்று டாமன் எனும் வித்தகர் கூறியமொழி கூர்ந்து கவனிக்க வேண்டியதொன்றாகும்.

பண்டைய முறைகளிலிருந்து நாம் செய்யப்புகும் மாறுதல்கள் ஆரம்பத்தில் குற்றமற்றனவாகவும் நன்மை பயப்பன போலவும் தோன்றலாம். ஆனால், போகப் போக அம்மாறுதல்கள் தீமையின் விளைவிலேதான் போய்முடியும். இம் முறைமாறுதல்கள் மனிதர்களின் மனங்களிலும் அவர்களையும் அறியாமல் மாறுதல்களைச் செய்கின்றன. சிறிது சிறிதாக, மனிதர்தம் எண்ணம் குணம் நடத்தை எல்லாம் மாறிவிடுகின்றன.மனிதனிடம் ஏற்படுகின்ற புதிய மாறுதலினால் சமுகமுறையும், வியாபார சம்பந்த நெறியும், தொழில் முறையும் சிதறுண்டு நாட்டின் நலம் கெடுகின்றது. பின்னர், குழப்பந்தான் எஞ்சும். எனவே இருக்கின்ற முறையினில் எந்த விதமான மாறுதல்கள்செய்தலும் அறிவோ ஆகாது. கல்விமுறையில் மாறுதல் இல்லாமல், நம்மைக் காக்கும்வேலையை மேற்கொண்ட பெரியோர் கல்வியை வளர்த்துவருவார்களேயானால், சமுகத்தில் நல்லொழுக்கம் வளரும்.பின் புதுச் சட்டமும் திட்டமும் அவசியமாகா. இனம் இனத்தையே வளர்க்கும். நன்மை நன்மையையும் தீமை தீமையையும்தான் வளர்க்க வல்லது. ஆகவே நமது கல்வியின் முறையினில் மாறுதல்கள் செய்யாமலும், மாந்தரிடம் இருக்கும் குறைகள் அகன்று அவரிடம் நிறைவு ஏற்படுமாறு செய்தும் ஒருநாடு நன்கு காக்கப்படுமாயின் போதும். மாந்தர் உயர்வார்களாயின் நாடும் ஆட்சிமுறையும் தாமே உயர்ந்துவிடும். புதுமை பொன்றும் புகுத்தாமல் செவ்விய கல்விமாத்திரம் கொடுக்கப்படுமாயின், அக்கல்வி ஆட்சியில் உள்ள குறைகளை அகற்றிப் பொதுநலத்திற் கியன்ற குடிவாழ்க்கையை எய்துவிக்கும். நாட்டின் நலத்திற்கான சட்டதிட்டங்கள் எதுவெது என்று நான் ஒன்றும் இங்கு வகுக்கப் போவதில்லை. சட்டத்தால் செப்பனிடமுயல்வதெல்லாம் பேதைமை. அதற்கு மனிதன்வகுக்கும் எந்தச் சட்டமும் போதாது. சட்டங்கள்தான் எல்லையில்லாமல் வளரும். சட்டம் தன் இனமான சட்டங்களை வளர்க்கத்தான் செய்யும். ஆகவே, ஒரு நாட்டின் காப்பாளர்கள் கல்வியைக் காக்கட்டும்; கல்வி மற்றெல்லாக் காவலையும் காத்துக்கொள்ளும். கல்வியின் துணையில்லாமல் ஒரு நாட்டைச் சட்ட திட்டங்களால் செப்பனிட முயல்வது ஒரு நோயாளி தனது நோயைத் தீர்த்துக்கொள்ளும் பொருட்டுத் தனக்கு விருப்பமுள்ள தின்பண்டத்தைத்

தின்று அந்நோயை விலக்க முயல்வதையே ஒக்கும்.

இதுவரையில் ஒரு சமுகத்தின் சந்தோஷத்தைப் பற்றிக் கூறினேன். தனிமனிதனுக்குரிய சந்தோஷம் என்பதொன்றுமில்லை. சமுகத்தின் சந்தோஷமே அச் சமுகத்தைச் சேர்ந்த ஒவ்வொரு மனிதனுடைய சந் தோஷமென்றேன். பின் மனிதனுக்குச் சந்தோஷம் என்பது இல்லையா என்று கேட்கலாம். மனித தர்மத் தில் முதலிடம் கடமையே பெறுதல் வேண்டும். கட மையைச் செய்வதால் நிகழ்வது சந்தோஷம். மனித முயற்சியின் மிகச் சிறந்த நோக்கம் மனிதவர்க்கத்தின் நன்மைகளை நாடுவதாகும். உலக நிர்வாகத்தில் தெய் விகமுறை ஏற்படுமாயின் அதுதான் உலகத்தில் வதி கின்ற ஜீவராசிகளின் சிறந்த சந்தோஷம். இத்தகைய அமைப்பில் தனிமனிதனுக்கும் ஓர் சந்தோஷத்திற்கு இடமுண்டு. அவனவன் தனக்குரிய கடமையை இய ற்றிவிட்டு, ஒழுக்கமுடன் வாழ்வதே தனிமனிதனின் சந்தோஷம். மேலும் சந்தோஷம் என்னும் இப்பதம் பலபொருளுடையதாய் இருக்கின்றது. ஒழுக்கமு டைய வாழ்க்கை யென்றும், அல்லது இந்திரிய சுகம் என்றும் இருபொருள்களை இச்சொல்தரலாம். சந்தோ ஷம் என்பது உள்ளத்தின் நிகழ்ச்சியா அல்லது புற மிருந்து வரும் ஒன்றா என்ற கேள்வியும் பிறக்கலாம். எனவே சந்தோஷம் என்னும் இப்பதம் வஞ்சனையு டையது. தீர்மானமான பொருளும், நியாயம் சத்தி யம் என்னும் பதங்கள் பெற்றுள தெய்வத் தன்மை யையும் இப்பதம் உடையது அன்று. எனவே இப்ப தம் உயரிய இயற்கையில் இடம் பெறுவதில்லை. வெளி வாழ்க்கைக்குரிய வசதிப்பொருள்களுடன் இச்சந்தோ ஷம் என்னுஞ் சொல் சேர்க்கப்படுகின்றதே ஒழிய, ஆன்மானுபவ நன்மையின் உறவை அது கொண்டிரு க்கவில்லை. ஆதலால் இச்சந்தோஷ தத்துவம், சிறந்த மனிதவாழ்க்கைக்கு அஸ்திவார மாகாது. நியாயமும், சத்தியமுமே, (Truth and Right) வாழ்க்கையின் நோக்க மாகவேண்டும். ஒரு நல்ல சமுகமாகட்டும், அல்லது ஒரு நல்ல அரசியல் ஆகட்டும், அதன் நோக் கம் இச்சத்தியத்தையும் நியாயத்தையும் பற்றியதா யிருக்கவேண்டும். செய்கின்ற ஒருகாரியம் அதிகமான ஜனங்களுக்குச் சந்தோஷந் தரக்கூடியதாயின், அக் காரியம் சத்தியத்திற்கும் நியாயதிற்கும் விரோதமான தாக விருந்தாலும் செய்யப்படலாம் என்று அரசியல் வாதிகள் சாதிப்பார். அதைச் சந்தர்ப்ப அவசியம் (Expediency) என்று பெயர் கொடுத்து அழைப் பர். அந்தச் சந்தர்ப்பஅவசியம், ஒரு ஜனத்தொகை யின் நன்மை என்ற கொள்கையினுல் கட்டுப்படுவ தால், சாச்வத தத்துவமுடைய சத்தியமும் நியாய மும் ஆகாது. சத்தியமும் நியாயமும் எவ்விதத் தளை யாலும் கட்டுப்படாமல் எந்நிலையிலும் தானேயாய் நின்று எல்லோர்க்கும் எவ்விடத்தும் நலம் விளைவிப் பவை. அரசாங்கமாகட்டும் சமுகமாகட்டும் மனிதனு கட்டும் அவைகளைத் தான் கடைப் பிடிக்கவேண்டும். அதுவே சீரிய வாழ்வாகும்.

மாந்தர் தனித்தனி எந்நிலையிலிருக்கின்றனரோ அந் நிலையிற்றான் சமுகமும் அரசியலும்இருக்கும். நல்லவர் களைக்கொண்ட வொருநாடும் அரசாங்கமும் நன்னிலை யிலேதான் இருக்கும். சமுகத்தையும் அரசாங்கத்தை யும் ஆக்குபவர்கள் தனிமனிதர்களல்லரோ? ஸிதியன் நாட்டாரும், திரேஸ் நாட்டாரும் ஆத்திரக்காரர்கள்; அந்நாட்டில் ஆத்திரத்தின் ஓட்டமே காண்கின்றோம். அதீனியர்களாகிய நாமோ புத்திவளர்ச்சியுள்ளவர்கள் நமது சமுகத்தில் அறிவின் விகசிதம் காணப்படவில் லையா. எகிப்த்து நாட்டாரும் பொனீஷியரும் பேரா சை பிடித்தவர்கள். அவர்களது பேராசை அந்நாட்டு அரசியல் முறையினில் காணக்கிடக்கின்றது. எனவே அங்கு வாழும் மக்களையே ஒக்கும் அந்நாட்டின் தன் மை. சமுகமும் அரசாங்கமும் சிறப்புறுவதற்கு, நாம் சட்டதிட்ட முயற்சிகளை விட்டுவிட்டு அந்நாட்டு மக்க ளின் வாழ்வு நல்ல ஒழுக்கத்தில் பொருந்தியதாய் நிலைத்திருக்கச் செய்யவேண்டுவதே அறிவாகும் என்ப தை மீண்டுமோர்முறை கூறுகின்றேன். இதுவே நாட் டினைக் காக்கும் தொழில்பூண்ட எல்லோர் கடன். மற்ற விஷயங்களை நாம்கடவுளின் கைகளில் விட்டுவிடலாம்.

ஒரு நாட்டினை, தத்துவ அறிவுடைய ஒரு சிலரே ஆள்வதற்கேற்றவர் என்பது எனதுமுடிவான துணிவு. ஜனநாயகம் என்னும் எண்ணிக்கையினரது அரசாங் கம் நாட்டிற்கு நன்மையயக்காது. அவர்கள் உண்மை யான இருக்கையை (True Being) அறியமாட்டார் கள். நியாயம், அழகு, சத்தியம் என்பவைகளைப்பற்றி அவர்மனதில் திடமானஎண்ணம் ஒன்றுமிராது. தத் துவஅறிவுடைய பெரியோரே விஷயவாய்மையையும், அன்னதன் இடத்தையும் அறியும் ஆற்றலர். அவர் களே ஆள்வதற்குரியவர். ஏனெனில், என்றும் சாச்வ தத்திலும் சத்தியத்திலும் படிந்த மனமுடையவர் அவர். அசத்யத்தைக் கண்டு அருவெறுப்பவர். அற்ப மான உள்ளஎழுச்சிகளும் ஆசைகளும், அறிவின்பால் அவர்கள்கொண்டுள ஊக்கத்தில்பட்டு மறைகின்றன. காலமும் வாழ்க்கையின் கோலமும் பயில்கின்ற நாட கத்தில் தாமும் கலந்துகொள்ளாமல் ஒதுங்கி நின்று பார்க்கும் பண்புடையோர் அவர். அப்படிப் பார்த்துச் சிந்தனையின் பெருமிதத்தில் வாழ்கின்ற அவர்கள் மனிதனது சிறு வாழ்க்கையை ஒரு பொருளாக மதி யார். சாவும் அவர்கள்பால் அச்சத்தைத் தருவதில்லை. எனவே அசையாமல், வாழ்க்கையின் அல்லலுட்படா மல் தானும் தன் சிந்தனையுமா யிருப்பர் அவர். எல் லோருக்கும் அண்மையினர் அவர், இனிய சுபாவமு டையவர். கோழைத்தனமும் செருக்கும் அவரைச் சேரா. அவர்கள் எதையும் எளிதில் கற்றுத் தெளி கின்றனர். தெளிந்ததை எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்திருக்கும் ஆற்றலும் அவர்களுக்குண்டு. அவர் மனம் எப்பொழுதும் நிதானமான அமைதியில் இருக் கும். சத்தியம் இயற்கையாய் அவர்களைச் சாருகின் றது. இத்தகைய நற்குணங்கள் நிறைந்துள அவர்க ளிடம், பொறுமைப் பேயாலும், ஒரு குற்றம் காண முடியாது. இத்தகைய மேலோர் அல்லாமல் வேறு யார்தான் நம்மை ஆள்வதற் குரியராவார்?

இன்னபடி சாக்ரிடிஸ் கூறிக்கொண்டிருக்கையில் ஒரு நண்பர் இடைமறித்து, "ஐயா, தத்துவம் பேசு வதைத்தம்வயிறுவளர்ப்பதற்குரியகருவியாய்க்கொண் டிருக்கின்றனர் எத்தனையோ பலர். அத்தகைய சாமர்த் தியசாலிகள் அயோக்கியர்களாக மாறுகின்றனரே. அவர்கள் கெட்டவர்களாயின் துஷ்டர்களாகின்றனர்; நல்லவர்களாயின் முட்டாள்களாகின்றனர். இதற்கு என்னசொல்கின்றீர். தத்துவவளம் பெற்றவர்களும் இழிந்துவிடலாம் என்பதை நீங்கள் ஏற்றுக்கொண் டால், 'அவர்கள்தான் ஆளத்தகுந்தவர்கள்' என்று நீங்கள் கூறியது எப்படிப் பொருத்தமுடையதாகும்.

சிறிது விளக்கவேண்டும்.'' என்றுகேட்கின்றார். அன்னதற்குச் சாக்ரிடீஸ் கூறுவதாவது:—

"விளக்க முயல்வேன். அரசாங்கத்திற்கும் நல்லமனிதர்களுக்கும் உள்ள சம்பந்தம் நூதனமானது. அதை விளக்க, நான் ஒருகட்டுக்கதையின் துணையை நாடவேண்டியவனாகவிருக்கின்றேன். ஒரு கப்பலின் தலைவனை எடுத்துக்கொள்வோம். அவன் அந்தக் கப்பலில் இருக்கும் மற்றக் கப்பல்வேலைபாளர்களைவிடச் சிறிது உயரமுடையவன். அவனுக்குக் காது சிறிது மந்தம், கண் பார்வையும் குறைந்தவன். கப்பல் ஓட்டும் தொழிலெல்லாம் நன்கு தெரிந்தவனாயினும் கப்பலில் வேலை செய்பவர்களின் முறையைச் சிறிதும் அறியாதவன். மற்ற வேலையாளர்கள், கப்பலின் போக்கை மாற்ற விரும்புகின்றனர். கப்பலோ அவர் விருப்பத்தின்படி திரும்பவில்லை. எனவே கப்பலைச் செலத்தும் அதிகாரத்தைத் தாம் பற்றிக்கொள்ளும் எண்ணுமுடன் அத்தலைவனது ஆகாரத்தில் மருந்தைக் கலந்து அவனைக் கட்டிப்போட்டுவிட்டுக் கப்பலைத் தம்வசப்படுத்திக்கொள்கின்றனர். அவர்களுக்குக் கப்பலோட்டும் கலை தெரியாது. அன்றியும் அக்கலையைக் கற்றுக்கொள்ள முடியாது என்பதும் அவர்களது கொள்கை. இந்தக் குழப்பத்தில் சேருபவன் நல்ல கப்பலோட்டி என்று கொள்ளப்படுகின்றான். காற்றையும் நக்ஷத்திரத்தையும் கவனித்துச் சமயம் நோக்கிக் கப்பலைத்திருப்ப வேண்டுமென்பதையும், அவர்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அதனை அறிந்தவன்தான் தலைவனாக வேண்டும் என்பதையும் அவர்கள் அறிந்தபாடில்லை. மேலும், அவனை முட்டாள் என்றும், வானத்தை நோக்குபவன் என்றும் பரிகாசமும் செய்தனர். இதுதான் எனது கதை. இது என் கருத்தை விளக்கும். எனவே தத்துவ அறிவுபடைத்துள ஒருவனைப் பழிப்பதில் பயனில்லை. அவனைச் சரியாய் உபயோகப்படுத்திக்கொள்ளாத மனிதர்களே பழிக்கப்படவேண்டியவர். வித்தகமுடையவன் செல்வவானை நாடமாட்டான். ஏழையோ செல்வனோ யாராகட்டும் தேவையிருக்கும்பொழுது வயித்தியனைத் தாங்களேதாம் தேடிச் செல்லவேண்டும் அல்லவா? எனது கதையில்கூறிய கப்பல்தலைவன் நல்ல கப்பலோட்டியே. வானம் நோக்குபவன் என்று குழப்பக்காரர்களால் இகழப்பட்ட தலைவன் தத்துவ சாஸ்திரியே. அவனைச் சரியே உபயோகப்படுத்திக் கொள்ளத்தெரியாத வேலையாளர்கள் அரசியல் வாதிகளான ஜனங்கள். அவர்களது அறியாமையால் அத்தலைவன் உபயோகமற்றவனாகச் செய்யப்பட்டான். கப்பல்தலைவன் உபயோக மில்லாதவனானது அவனது குற்றமா? அதேபோல், தத்துவஅறிவு படைத்தவன்பால் குற்றமில்லை, தத்துவஅறிவில்லா மாக்களே அவர்களைக் கெடுத்துவிடுகின்றனர். (தொடரும்)

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

[810-வது பக்கத் தொடர்ச்சி]

3-ம் பத்து 10-ம் தசகம்.

6-ம் பாசுரம்.

துயரில் சுடரொளி தன்னுடைச்
சோதி நின்றவண்ணம் நிற்கவே
துயரின் மலியு மனிசர்
பிறவியிற் றோன்றிக்கண் காணவந்து
துயரங்கள் செய்து தன்றெய்வ
நிலையுலகிற் புகவுய்க்கு மம்மான்
துயரமில் சீர்கண்ணன் மாயன்
புகழ்துற்ற யானோர் துன்பமிலனே.

குறிப்புக்கள்:—சென்ற பாசுரத்தில், பகவான் பரவாஸுதேவன் திவ்விய மங்கள விசிதனாய் ஜோதி மயமான வைகுண்டத்தில் நிரந்தரமாய் இருந்து முக்தர்களுக்கு ஸதாஸர்வகாலம் ஆநந்தத்தை விளைவிக்கின்றானென்று ஸூசிப்பித்தார். இப்பாசுரத்தில் அவ்வண்ணம் அந்த உன்னத ஸ்திதிசுவரூபம்பிராப்தமாய் அவனுக்கிருந்தும் இவ்வுலகில் மனுஷிய ரூபத்தோடு அவதரித்தாலும் தன்னுடைய ஐசுவரிய ரூபமான ஸ்வபாவத்தை ஆச்ரிதருக்குக் காட்டித் தன் தெய்வ நிலையை ஸ்தாபித்து அவனை விட்டுப் பிரிந்தால் தரிக்கவொண்ணாகபடி நோவுசெய்கின்றான், என்கிறார்.

பதக்குறிப்பு:—துயரங்கள் செய்து-அவனை விட்டுப் பிரியின் தரிக்கவொண்ணாதபடி பக்தர்களைத் துயரப்படுத்துகிறான் என்கிறார். தெய்வ நிலைபுக-ஆச்ரிதர்கள் பிரஸித்தமாய் அவனே ஈசனென்று அறியும்படி. துயரமில்சீர்-சீர்-நல்ல குணங்கள். அதற்கு துயர் - அல்ப குணங்கள். இல-கலப்பில்லாத. கருத்துரை, ஆச்சரிய பூதனான கல்லியாணகுண விசிஷ்டனான கண்ணன் புகழை நிரம்பப் பேசுகின்ற எனக்கோர் துக்கமில்லை, என்கிறார்.

விசேஷக் குறிப்பு:—ஸ்ரீ கிருஷ்ண பகவான் "தன் தெய்வ நிலைபுக உய்க்கும்'' அதாவது தன் ஐசுவரியத்தையும் ஆச்சரிய சக்தியையும்பிரகடனமாக்கியது, சென்ற பாசுரத்தில் கூறிய வைகுண்டத்துக்குத் தேர்கடாவிச் சென்று ஒருபொழுதில் வைதீகன் பிள்ளைகளைக் கொண்டு கொடுத்தும் அப்பால் அந்தத் தினமே யாகத்தில் விட்டுப்போன மத்தியான்ன ஸவநம் சாயம் ஸவநம் இரண்டையும் முடித்து யாகத்தைப் பூர்த்திசெய்ததுமே உதாஹரணம்ஆகலாம். இதுவே ஆழ்வாரின் திருவுள்ளத்தில் புத்தியஸ்தமாக இருக்கிறதாக எண்ண இடமுண்டு.

7-ம் பாசுரம்.

துன்பமு மின்பமு மாகிய
செய்வினை யாயுலகங் களுமாய்
இன்பமில் வெந்நர காகி
யினியநல் வான்சுவர்க் கங்களுமாய்
மன்பல் லுயிர்களு மாகிப்
பலபல மாய மயக்குக்களா
லின்புறுமிவ் விளையாட் டுடையானைப்
பெற்றேதுமல்ல லிலனே.

பதவுரை:—துன்பமும் இன்பமும் ஆகிய - சுகம் துக்கம் ஆகிய இவைகளைப் பின்பயனாகக் கொடுக்கக் கூடிய, செய்வினையாய்-மனிதர்கள் செய்யும் புண்ணிய பாபகர்மங்களாய், உலகமாய்-மேல்குறித்த பலன்களை அநுபவிக்கும் பூமியாய், இன்பமில்-சுகமில்லாத, வெம்

நரகாகி - குரூரமான நரகமாகி, இனிய - ஸுகத்தைத் தரும், வான் - பெரிதான, சுவர்க்கங்களாய் - சுகாநுபவங்களுக்குரிய சுவர்க்கலோகங்களாய்; மன் - ஸ்திரமான, பல் உயிர்களுமாகி - ஆத்மாக்களுமாகி, அதாவது, மேல் செப்பிய வகைகளுக்கெல்லாம் அந்தராத்மாவாய் நின்று, பலபல - வெவ்வேறான, மாயமயக்குக்களால்-பிருகிருதி கல்பிக்கும் மோஹங்களாலே மேல செப்பிய ஆத்மாக்கள் பிருகிருதி கூட்டங்களின் வலையிலகப்பட்டு அதினால்உண்டாகும் மயக்கங்களாலே—("மாயம்"–"மாயை" என்கிறபதத்திரிபு). இங்கு, பகவத்கீதையில் "மாயாந்து பிருகிருதிம் விதத்தியாத்" என்றபடி 'பிருகிருதி'யைக் குறிக்கிறது). இவ்வண்ணம்சேதநர்களுக்குண்டாகும் மோஹங்களைக் கிளிகளை வளர்க்கின்ற எஜமான் கிளிகள் படும்சுகதுக்கத்தை ரஸமாய் அநுபவிப்பதுபோல், இன்புறும் - ரஸத்தை அடைகிற, இவ்விளையாட்டுடையானை - ஜகத் வியாபாரமாகின்ற (லீலை) விளையாட்டை, உடையானை-உடையவனை, பெற்று-கவிகளுக்கு விஷயமாகப்பெற்று, ஏதும்-கொஞ்சங்கூட, அல்லல் இலன்-மனக்கிலேசமில்லாதவனாயிருக்கின்றேன்.

இப் பாசுரத்தில் பகவானது விளையாட்டாகவே உலகங்களில் ஆத்மாக்கள் அநுபவிக்கும் சுகதுக்கங்களும் பிரவர்த்திகளும் இயற்றப்படுகின்றன என்ற தத்துவத்தைக் கற்பிக்கிறார்.

8-ம் பாசுரம்.

அல்லலி லின்ப மளவிறந்
தெங்கு மழகமர் சூழொளியன்
அல்லி மலர்மகள் போக
மயக்குக்க ளாகியு நிற்குமம்மான்
எல்லையில் ஞானத்தன் ஞான
மஃதேகொண் டெல்லாக்கரு மங்களுஞ்
எல்லையின் மாயனைக் கண்ணனைத் [செய்
தாள்பற்றி யானோர் துக்கமிலனே.

பொழிப்புரை:—துக்கம் எள்ளளவும் கலக்காத நிரவதிக ஆநந்தத்தையுடையவனாய் மங்களமான தேஜஸ் பூரணமாய் நிறைந்துள்ளவனாய் நிரவதிகயௌவனமும் ஸௌந்திரியமும் கல்லியாண குணங்களும் சோபிக்க அவற்றால் பரிபூரணமாயிருந்த பெரிய பிராட்டியாரோடுள்ள கலவியினால் பிறந்தவொரு பிரீதி அதிசயத்தினாலே ஆநந்த மோஹம்கொண்டு அதனால் திவ்விய ஞானனாய் அந்த ஞானத்தையே உபகரணமாகக் கொண்டு அவளது பிரீதியின்பொருட்டு ஜகத்சிருஷ்டியாதிவிளையாட்டைச்செய்து அவளுக்குச் சந்தோஷத்தைவிளைவிக்கின்ற ஆச்சரிய பூதனான கண்ணனின் திருவடிகளைப்பற்றி நான் ஒரு துக்கமுமில்லாமல் ஆயினேன்.

குறிப்பு:—சென்ற பாசுரத்தில் பகவானது உலக சிருஷ்டியாதி வியாபாரங்கள் அவனுக்கு ஓர் அத்வதீயவிளையாட்டென்றார்; அதற்குக்காரணமும் நீதியும் ஔசித்தியமும் இப்பாசுரத்தில் விவரிக்கிறார். பிருகிருதியாகிற மாயையால் இவ்வுலகத்திலுள்ள அசித் வஸ்துக்கள் (விதை மரமாயும் மரத்தின் கிளைகளாயும் பூ காய் கனியாகவும்) விகாஸமடைகின்றன. இதற்கு அதிஷ்டாந தேவதை மஹாலெட்சுமி. பகவான் நித்தியாநந்தன்; பூர்ண ஆநந்தனுமாம். இவனுக்கு மஹாலெட்சுமியின் கலவியால் ஏற்படும் ரசமும் ஆநந்தமும் வரையறுத்துக் கூறவல்லதல்ல. இலக்குமிக்கு ஆநந்தத்தை விளைவித்துத் தன் ஆநந்தத்தைப் பெருக்கிக்கொண்டு இருவரும் ரஸாநுபவம் சேர்ந்து செய்கையில் பகவானுக்கும்கூட ஞானவிகாஸம் ஏற்பட்டு அப்படிப்பட்டதோர் விகாச உற்சாகத்தினால் விவித விசித்திர ஸிருஷ்டிகளை நீரிலும் பூமியிலும் ஆகாயத்திலும் நிலைநிற்கும்படி ஏற்படுத்துவதை மஹாலக்ஷ்மியின் உற்சாகத்திற்கும் களிப்புக்கமாகச் செய்கிறானென்று இப்பாசுரத்தில் விவரம் கூறுகின்றார். ஆகவே ஜகத்வியாபாரம் இவ்விருவருக்கும் களிப்பூட்டும் பிரயோஜனமாயிற்று, என்று சொல்ல என்ன தட்டுண்டு. 7-ம் பாசுரத்தில் முன்னரே சித்வஸ்துக்களைப் பிருகிருதி வசத்தால் மோஹிப்பிப்பது பகவானது திருவிளையாடலாகுமென்பதைச் சொல்லியாயிற்று. ஆகவே மஹாலட்சுமியின் பிரீதியின்பொருட்டுப் பகவான் இவ் விளையாட்டு உடையானென்ற ஆழ்வாரின் காவிய கல்பனை வெகு சங்கதமென்று நாம் அறியதக்கது. (இனி சில பதக்குறிப்புக்களை பாசுரத்தை நன்கு உணரும் பொருட்டு எடுத்தௌழுதுவோம்) அல்லலில் இன்பம்-துக்க சம்பந்தமில்லாத ஆநந்தம். அளவிறந்து - முடிவில்லாமல். அழகமர் ஒளி எங்கும் சூழ்—அழகான காந்தி எல்லாத் திக்குகளிலும் வியாபித்து, அல்லிமலர் மகள் - மஹா இலக்குமியின், போகமயக்குக்கள் - கலவிரஸத்தால் வரும் ஆநந்தப்பெருக்கு, ஆகியும் நிற்கும் - உண்டாயிருக்குமவனான ஞானத்தன்.

9-ம் பாசுரம்.

துக்கமில் ஞானச் சுடரொளி
மூர்த்தி துழாயலங்கற் பெருமான்
மிக்கபன் மாயங்களால் விகிருதஞ்
செய்து வேண்டு முருவுகொண்டு
நக்கபி ரானோடு அயன்முத
லாகவெல் லாருமெவையுந் தன்னு
ளொக்க வொடுங்க விழுங்க
வல்லானைப் பெற்றொன்றுந் தளர்விலனே.

அவதாரிகை:—மேல் 7, 8- பாசுரங்களில், சிருஷ்டியாதி விசித்திரங்களைப் பேசிய பெரியார், இப்பாசுரத்தில் அச்சிருஷ்டியின் விஷயத்தில் பகவான் ஆச்சிரியமான திவ்விய அவதாரங்களை எடுத்து நிர்வகிப்பதை முதலில் பேசி, பிறகு அவன் அச்சிருஷ்டிகள் எல்லாம் யுகப்பிரளயத்தில் மறைய அவற்றை மஹேசுவரன் பிரம்மா முதலியோர் உள்பட உருவுகாணாதே எல்லாவற்றையும் விழுங்கித் தன் திருவயிற்றில் இனி ஒரு புனர்சிருஷ்டி உண்டாகின்றவரையில் வைத்துக் காப்பாற்றும் ஆச்சரிய சக்தியை வியந்து இப்பாசுரத்தில் அருளிச்செய்கிறார்.

குறிப்புக்கள்:—மிக்க விநோதமான பல மாயங்களாகிய ஆச்சரியசக்திகளால், வேண்டுமுருவு—சமயசந்தர்ப்பங்களுக்குத் தக்கயுக்தமான ரூபங்களை, கொண்டு-ஸ்வீகரித்து, விகிருதம் செய்து - உலகத்தில் காணாத காரியங்களைச் செய்து (விகிருதம்-விஹ்ருதம் என்ற சொல்லின் திரிபாகக் கொண்டால் வேடிக்கைகளை நடத்தி என்று பொருள் கொள்ளக் கூடும்)

பொழிப்புரை:—ஹேயமான குணங்கள் ஒன்றும் கலப்பில்லாதவனாய் ஸர்வஞ்ஞனாய் நிரவதிகதேஜஸை உடையவனாய், திவ்விய ஸௌந்தரியத்தோடு விளங்கும் ரூபமுடையவனாய்த் திருத்துழாய் மாலைகளை யணிந்திருக்கும் எம்பெருமான் தன் விசித்ர சேஷ்டிதங்களாலே உலகமளித்துப் பிரம்மாதி ஸர்வாத்மாக்களையும் ஒரே காலத்திலேயே ஒரு பக்கம் ஒடுங்கத் தன் திரு

வயிற்றிலே விழுங்கவல்லவனைக் கவிபாடும் நான் சோர்வு ஒன்றுமில்லாம லிருக்கிறேன்—என்கிறார்.

10-ம் பாசுரம்.

தளர்வின் றியே யென்று மெங்கும்
பரந்த தனிமுதல் ஞானமொன்று
யளவுடை யைம்புலன்க ளறியா
வகையால் அருவாகி நிற்கும்
வளரொளி யீசனை மூர்த்தியைப்
பூதங்க ளைந்தை யிருசுடரைக்
கிளரொளி மாயனைக் கண்ணனைத்
தாள்பற்றி யானென்றுங் கேடிலனே

உரை:—தளர்வின்றி - சோராமல், என்றும் எங்கும்—எக்காலத்திலும் எவ்விதத்திலும், பரந்த - வியாபித்த, தனிமுதலை - ஒப்பில்லாத காரணபூதனை, அளவுடைய - கிரகிப்பதில் ஏதோ சிலவற்றை மாத்திரம் அறிந்துகொள்ளுஞ் சக்தியுள்ள, ஐம்புலன்கள்-மெய் வாய் கண் மூக்கு செவி இவைகள், அறியாவகையால்- தெரிந்துகொள்ளக் கூடாதபடி, அருவாகி நிற்கும் - புலப்படாமல் சூக்ஷ்மமாக இருக்கும், வளர்ஒளி - மிகுந்த தேஜஸையுடைய ஈசனை, மூர்த்தியை - இவைகளுக்கு ஒருவாறு ஏகதேசம் புலப்பட்டாலும் அவைகளில் தோஷம் தட்டாத பிரபுவை, பூதங்கள் ஐந்தை - ஐம்புலன்களுக்கும் உள்ளிருந்து நடத்துமவனை, இருசுடரை-சூரிய சந்திரர்களுக்குள் இருக்கும் அந்தராத்மாவை, கிளர் ஒளி-விசேஷ தேஜஸுடைய, மாயனை - ஆச்சரியமானவனை, கண்ணனை - மனுஷனுய்க் கிருஷ்ணனாக அவதரித்த இனியனை, தாள்பற்றி-திருவடித்தாமரைகளை எனக்குத் துணையாகக் கொண்டு, ஒன்றும் கேடிலனே-ஒருவிதமான துயரமுமில்லாதவனா யிருக்கிறேன்.

11-ம் பாசுரம்.

கேடில் விழுப்புகழ்க் கேசவனைக்
குருகூர்ச் சடகோபன் சொன்ன
பாடலோ ராயிரத் திவையுமோர்
பத்தும் பயிற்றவல் லார்கட்கு
நாடு நகரமும் நன்குடன்
காண நலனிடை யூர்திபண்ணி
வீடும் பெறுத்தித் தன்மூ
வுலகுக்கும் தருமொரு நாயகமே.

உரை:—கேடில் - நாசமில்லாத, விழு - சிலாக்கியமான, புகழ் - புகழையுடைய, கேசவனை - கேசி என்ற ராக்ஷஸனை ஸம்ஹரித்த ஸ்ரீ கிருஷ்ணபகவானை, குருகூர்ச் சடகோபன் சொன்னபாடல்ஓராயிரத்து இவையும் ஓர்பத்தும் பயிற்றவல்லார்கட்கு - அப்பியஸிக்க வல்லவர்களுக்கு; நாடு நகரமும்-நகரத்துள்ள ரஸிகஜநங்களும் நாகரீகமில்லாத கிராமவாஸிகளும், நன்குடன் காண - இவர்கள் வெகுமானப்பட்டு எல்லாரும் நன்கு மதிக்கப்படுவதைக் காண, நலனுடன் ஊர்தி பண்ணி - நல்ல நடவடிக்கைகளில் பயிலச்செய்து, வீடும் பெறுத்தி - மோக்ஷத்தையும் அநுபவிக்கச்செய்து, தன் மூவுலகுக்கும்-தன்னுடைய மூன்றுலோகங்களுக்கும், ஒரு நாயகமே - ஏக சக்கராதிபத்தியத்தை, தரும்-கொடுக்கும். அதாவது இந்த உலகத்திலும் மோக்ஷத்திலும் நல்ல ஆநந்தமான சுகாநுபவத்தைக் கொடுக்கும்.

விசேஷக் குறிப்பு:—மூன்றுலோக ஆதிபத்தியம் பகவானுக்கே உளதாயிருக்க அந்த ஆட்சியைப் பக்தர்கள் ஒவ்வொருவருக்கும் ஏகதேசமாய்த் தருமோவென்ன-ஆநந்தாநுபவத்தில் ஈசுவரனைப்போலவே முக்தர்களும் அநுபவிப்பாரென்பது சித்தாந்தம். ஓர் வித்தியாஸமே உளது.

அது யாதெனில், ஈசுவரனுக்கு ஜகத்சிருஷ்டி வியாபார கருமமும் அதன் பொறுப்பும் உண்டு. பக்தர் மோக்ஷத்தில் சென்றாலும் இது மாத்திரம் அவருக்கில்லையே தவிர மற்ற எல்லா விதத்திலும் "நிரஞ்சன பரம ஸாமியம் உபைதி" என்று வேதவாக்கியத்தின்படி மற்று எல்லாவிதத்திலும் ஈசுவரனுக்கு ஸமமென்றே தீர்மானம். இதற்குப் பிரமாணம் வியாஸபகவான் பிரம்மஸூத்திரத்தில் 4-ம் பாதம் 17-வது ஸூத்திரம் தொடங்கி 21-வது ஸூத்திரம் வரையில்.

அப்பர்

அப்பரும் அறுபத்துநான்கு கலைகளும்—29. தருக்கம்

[806-வது பக்கத் தொடர்ச்சி]

5. திட்டாந்தம் (Individual Instances)

வாதிப் பிரவாதிகளுக்கு உடன்பாட்டு விடயமான அருத்தம் திருஷ்டாந்தமாம். அதனை, சாதருமி, வைதருமி, எனத் தர்க்கநூலார் இருவகையிற் கொள்வர். சாதருமி திருஷ்டாந்தமாவது உடன்பாட்டால் காட்டும் அந்வய திருஷ்டாந்தம்:—

பணிந்தா ரனபாவங்கள் பாற்ற வல்லீர்
படுவெண் டலையிற் பலிகொண் டுழல்வீர்
துணிந்தே யுமக்காட் செய்துவா ழலுற்றாற்
சுடுகின் றதுசூ லைதவிர்த் தருளீர்!
பிணிந்தார் பொடிகொண்டு மெய்பூ சவல்லீர்
பெற்ற மேற்றுகந் தீர்சுற்றும் வெண்டலை
கொண்டணிந்தீ ரடிகே ளதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே

திருவதிகை வீரட்டானம் - பண்—கொல்லி 3.

இது ஒற்றுமைத்தருமத்தால், தன் பணியை ஏற்ற சிவபெருமான் சூலைநோய் தவிர்க்கவேண்டுமென்னல்.

மற்றொருதிருஷ்டாந்தம், வைதருமி அல்லது வியதிரேக திட்டாந்தமாம். அதாவது, மாறுபட்ட தருமத்தை யுடைமையால் எதிர்மறை உருவத்துடன்காட்டப் படுவதாம். (உ-ம்)

பொன்போல மிளிர்வதோர் மேனியினீர்
புரிபுன் சடையீர் மெலியும் பிறையீர்
துன்பே கவலை பிணியென் றிவற்றை
நணுகாமற் றுரந்து கரந்துமிடீர்

என்போ லிகளும் மையினித் தெளியா
ரடியார் படுவ திதுவே யாகில்
அன்பே யமையும் மதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே
திருவதிகை வீரட்டானம் - பண்—கொல்லி 9.

என்னைப்போன்ற அடியார்களுக்கு இக்கதியானால், அரனே, உனக்கு அன்பு என்னும் நாமம் அமையும் என்றது வஞ்சகப்புகழ்ச்சியணியாய், எதிர்மறையில் திருஷ்டாந்தம் காட்டும்.

6. சித்தாந்தம் (Established Truth).

பிரமாணத்தை யுடைத்தாயிருக்கும் தன்மையால் உடன்பாடாகும் அருத்தம் சித்தாந்தம் எனப்படும். எனவே சாஸ்திர முணர்ந்தவன் பிரமாண முடைமையால் அங்கீகரித்த அர்த்தமே சித்தாந்தம் என்னலாகும். சித்தாந்தம் என்பது சித்தத்தின் முடிவு (What we feel as finally Correct); எனவே முற்றிய முடிபு.

ஆர ணப்பொரு ளாமரு ளாளனார்
வார ணத்துரி போர்த்தம ணாளனார்
நார ணன்நண்ணி யேத்துநள் ளாறனார்
கார ணக்கலை ஞானக் கடவுளே
திருநள்ளாறு - திருக்குறுந்தொகை—2.

இது சைவ சித்தாந்தமான முடிபு.

ஆராயப்புகின், சித்தாந்தமென்பதே உபசார வழக்கென்னலாம். நேற்று சித்தாந்தமாய்க் கொண்டதோர் அருத்தத்தை இன்று கண்டித்துப் பூர்வபக்ஷமாக்கி, நூதன அருத்தம் ஒன்றைச் சித்தாந்த மென்னல் எல்லாச் சமயவாதிகளுக்கும் அறிவியல்நூல் வல்லாரெல்லாருக்கும், தர்க்க தத்துவ விசாரணையாளருக்கும் பொதுவான செய்கையாம். எனவே நன்கு ஓதிய பின்னர்த் துணிதலே சிறப்பு.

வேத மாகிய வெஞ்சுட ராணையார்
நீதி யானில னாகிய வாணையார்
ஓதி யூழி தெரிந்துண ராணையார்
காத லானைக் கண்டீர்கட வூரரே.
திருக்கடவூர் வீரட்டம் - திருக்குறுந்தொகை—9.

சித்தாந்தம் தர்க்கமரபில் நால்வகைத் தோற்றமாய்க் காட்டப்படும். அவையாவன:—

(1) சர்வ தந்திர சித்தாந்தம்:—இதில் தருமி மாத்திரம் உண்மை. அதாவது சாஸ்திர முணர்ந்தவர் யாவராலும் அங்கீகரிக்கப்படும் பிரமாணம். எனவே வாதிப் பிரதிவாதிகளுக்கு அங்கீகாரமானது (Common ground or admitted fact). ஜாதி * முதலிய தர்மமுண்டென்பதில் விவாதம் பல விருப்பினும் பிருதிவியாதி தர்மிமாத்திரம் உண்டென்பதில் யாதொரு விவாதமு மின்மையின், 'தர்மிமாத்திர முண்மை' சர்வதந்திர சித்தாந்தமாம். அதை யெடுத்துக் காட்டுவதுபோல், அப்பரும்

குலங்கண்மிகு மலைகடல் கண்ஞாலம் வைத்தார்
குருமணிசே ரரவைத்தார் கோலம் வைத்தார்
உலங்கிளரும் அரவத்தி னுச்சி வைத்தார்
உண்டருளி விடம்வைத்தா ரெண்டோள் வைத்தார்
நிலங்கிளரும் புனல்கன லுள் அனிலம் வைத்தார்
நிமிர்விசும்பின் மிசைவைத்தார் நினைந்தா ரிந்நாள்
நலங்கிளருந் திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே.
திருநல்லூர் - திருத்தாண்டகம் 1.

என்று, குலங்கள் எப்பூதத்தின் கண்ணும்நிகழ்வதைக் காட்டுகின்றது காண்க.

(2) பிரதிதந்திர சித்தாந்தம்:—இது வாதிப் பிரதிவாதிகளுக்குள் ஒருவரால் மாத்திர மங்கீகரிக்கப்பட்டும் இரண்டு சாஸ்திரங்களுள் ஒரு சாஸ்திரத்தில் சித்தாந்தம் செய்யப்பட்டு முள்ள அருத்தமாகும். (உ - ம்)

"அல்லலாந் தொழில்படைத்தே யடிக்கடி வுருவெடுத்
மல்லல்மா ஞாலங் காக்க வருபவர் கடவுள்" [தே

என்னல் வைணவ சித்தாந்தமாகும். அது அந்தச் சமயத்தோரால் அங்கீகரிக்கப்பட்டு ஒவ்வொரு அவதாரமும், பூமியில் எக்காலத்தில் புண்ணியம் குறைந்து பாவம் மேலிடுகின்றதோ அப்போது நேருமென்பர். அக்காலத்திலுள்ள பூமியின் குற்றத்தை நீக்க யான் அவதரிப்பேனென்று ஸ்ரீ கிருஷ்ணபகவான் கூறுவது பகவத்கீதை முதலிய நூல்களிற் காணலாம். ஆயினும் இது சைவர்கள் சித்தாந்தமாகாதாயினும், வைணவர்களால் அங்கீகரிக்கக்கூடியதாதலால் இது பிரதிதந்திர சித்தாந்த மெனப்படும்.

(3) அதிகரண சித்தாந்தம்:-கடம் செய்தவன் ஒரு குலாலன் என்னும் கர்த்தாவுடையதுபோல், இந்நிலமும் கடம்போல, என்னும் அநுமானத்தால் கர்த்தா சித்திக்கும்போது, அக்கர்த்தா சர்வ வல்லமையுடையவனென்று சித்திப்பது அதிகரண சித்தாந்தமெனப்படும். எந்த அர்த்தத்தின் சித்தியுண்டாகும் போதே பிரஸ்தாபத்திலுள்ள மற்றொன்று சித்தியுண்டாகின்றதோ அதுவே, அதிகரண சித்தாந்தம். (உ-ம்)

மண்டலத்தின் மிசையொருவன் செய்தவித்தை
யகோவெனவும் வார ணாதி
யண்டமவை யடுக்கடுக்கா யந்தரத்தில்
நிறுத்துமவ தானம் போல
எண்டருநல் லகிலாண்ட கோடியைத்தன்
னருள்வெளியில் இலக வைத்துக்
கொண்டுநின்ற அற்புதத்தை யெவராலும்
நிச்சயிக்கக் கூடா வொன்றை
தாயுமானவர்.

மூத்தவனை யுலகுக்கு முந்தி னானே
முறைமையா லெல்லாம் படைக்கின் றானே
ஏத்தவனை யேழுலகு மாயி னானே
யின்பனைத் துன்பங் களைகின் றானே
காத்தவனை யெல்லாந்தான் காண்கின் றானே
கடுவினையேன் றீவினையைக் கண்டு போகத்
தீர்த்தவனே திருச்சோற்றுத் துறையு ளானே
திகழொளியே சிவனேயுன் னபய நானே.
திருச்சோற்றுத்துறை - திருத்தாண்டகம் 1.

(4) அதியுபகம சித்தாந்தம்:—இதை உரையிற் கோடல் என்னும் உத்தியால் இலக்கணங்களில் காட்டுவார். கீழ்வரும் அப்பர் பாசுரத்திலுள்ள உம்மைகளைக் கவனிக்கவும்:—

கங்கையைச் சடையுள் வைத்தார்
கதிர்பொறி யரவும் வைத்தார்
திங்களைத் திகழ வைத்தார்
திசைதிசை தொழவும் வைத்தார்

* "பாதியி லுமையா டன்னைப் பாகமா வைத்த பண்பன்
வேதிய னென்று சொல்லி விண்ணவர் விரும்பி யேத்தச்
சாதியாஞ் சதுர்மு கனுஞ் சக்கரத் தானுங் காணச்
சோதியைத் துருத்தியானைத் தொண்டனேன் கண்டவாறே"
திருத்துருத்தி - திருநேரிசை 6.

மங்கையைப் பாகம் வைத்தார்
மான்மறி மழுவும் வைத்தார்
அங்கையு ளனலும் வைத்தா
ரையனை யாற னாரே.

திருவையாறு - திருநேரிசை 1.

இப்பாசுரத்தை, பின்வரும் அத் தலத்தின் வேறோர் பாசுரத்தோடு வாசிக்கவும்:—

சிந்திப் பரியன சிந்திப்ப
வர்க்குச்சி றந்துசெந்தேன்
முந்திப் பொழிவன முத்தி
கொடுப்பன மொய்த்திருண்டு
பந்தித் துநின்ற பழவினை
தீர்ப்பன பாம்புசுற்றி
அந்திப் பிறையணிந் தாடுமை
யாற னடித்தலமே

திருவையாறு - திருவிருத்தம் 1.

பிரத்தியக்ஷத்தில் வாக்கியத்தினூடு காட்டப்படாமல் மறைந்த அருத்தம் உண்டென்று இந்தப்பாசுரங்களில் நாம் அங்கீகரிப்போமாயின், அவையே அபியுபகம சித்தாந்த மெனப்படும்:—

நற்றவஞ் செய்த நால்வர்க்கு நல்லறம்
உற்ற நன்மொழி யாலருள் செய்தநல்
கொற்ற வன்குரங் காடுது றைதொழப்
பற்றுந் தீவினை யாயின பாறுமே.

திருத்தென்குரங்காடுதுறை - திருக்குறுந்தொகை 10.

காட்டினு ரெனவு நாட்டினு ரெனவுங்
கடுந்தொழில் காலனைக் காலால்
வீட்டினு ரெனவும் சாந்தம்வெண் ணீறு
பூசியோர் வெண்மதி சடைமேல்
சூட்டினு ரெனவுஞ் சுவடுதா மறியார்
சொல்லுள சொல்லுநால் வேதப்
பாட்டினர் போலும் பந்தணை நல்லூர்
நின்றவெம் பசுபதி யாரே.

சம்பந்தர்.

7 அவயவம்:—அநுமானத்திற்கு அடிப்படையான ஏகதேசங்கள். இது வாதவொழுங்கின் அங்கங்கள். ஆங்கிலத்தில் (Bases of inference) எடுத்துக்காட்டும் தொடர்நிலைக்கு முக்கிய பாகங்கள் என்றும் அங்கங்களென்றும் கூறப்படும். ஆங்கில தர்க்கத்தில் அநுமானத்தை இருவகையாகப் பிரிப்பர். அவற்றில், கொண்ட பிரதிஞ்ஞைகளிலிருந்து நிரூபிப்பது ஒன்று (Deductive logic); கண்ட காட்சிகளால் நிரூபிக்கும் பிரதிஞ்ஞைகள் மற்றொன்று (Inductive logic). இப்படி மேல்நாட்டுத் தர்க்கவாதிகள் பிரித்து வைத்திருப்பினும், இயற்கையில் இவை ஒன்றைவிட்டு ஒன்று பிரியாதிருக்கும். அப்படிப் பிரிந்திருக்குமாயின் அவற்றில் முதலதை (a priori) ஆராய்ச்சியின்றி செய்யப்பட்டதென்றும், மற்றொன்றை (a posteri ori) பரீட்சையின்றித் துணிந்ததென்றும் குற்றங்கூறுதலுமுண்டு. நமது தர்க்கநூல்களில் இவ்விரண்டும் ஒருங்குசேர்த்து, வஸ்து நிர்ணய அவயவங்களென வும், அவற்றை ஐந்தாகவும் பிரித்துள்ளார். அவையாவன (i) பிரதிஞ்ஞை (ii) ஏது (iii) உதாகரணம் (iv) உபநயம் (v) நிகமனம் என்பன. அவற்றுள்

(i) பிரதிஞ்ஞையாவது—சாத்திய தரும விசிட்ட தருமிப் பிரதிபாதக வசனமாகும். "இம்மலை தீயுடைத்து" என்னும் வாக்கியத்தில், 'தீயுடமை' சாத்தியதருமம் "மலை" தருமி, சாத்திய தருமத்துடன் கூடிய தருமையைக் கூறும் இவ்வாக்கியத்தை, சாத்திய தரும விசிட்ட தருமிப்பிரதிபாதக வசனமென்பர் தர்க்க நூலார். (இதனை ஆங்கிலத்தில் Proposition என்பர்).

(ii) ஏதுவாவது, 3-ம் வேற்றுமை யுருபும் ஐந்தாம் வேற்றுமையுருபும் பெற்ற அறிகுறியைக் காட்டும் வாக்கியமாகும். (உ-ம்) "புகையுடைமையால்" (ஏது-Reason)

(iii) உதாகரணம்—அதாவது உதாரணம்; எனவே திருஷ்டாந்த வசனமாகும். யாது புகையுடைத்தோ, அது தீயுடைத்து. அடுப்பு என்பது போலாம்.

(உதாகரணம் - Example) எனவே வியாத்தியோடு கூடிய திருஷ்டாந்தம் கூறும் வாக்கியம்.

(iv) உபநயம் (Application)-பக்கத்தில் இலிங்கத்தின் உபசங்காரம் உபநயமெனப்படும். இதுவும் நெருப்பு வியாப்பியமான புகையுடையது, என்பது.

(v) நிகமனம் (Conclusion)-மேற்கண்ட நான்கு அவயவங்களால் கொண்டுவரப்பட்ட முடிவு.

இவ்வைந்து அவயவங்களின் சமுதாயம் நியாயம் எனப்படும் (Syllogism)

இவ்வொழுங்கில் வசனத்தில் அமைந்து நிற்கும் நியாய உருவம் செய்யுட்கண்ணே சற்று மாறும். திருநாவுக்கரசு கூறும் நற்புத்தி வெளிப்படையாயுள்ள பாசுரங்களில் இவ்வவயவங்களை எளிதில் காணலாம்:—

உடறனைக் கழிக்க லுற்ற
வுலகத்து ளுயிர்கட் கெல்லாம்
இடர்தனைக் கழிய வேண்டி
லிறைவனை யேத்து மின்னோ
கடறனி நஞ்ச முண்டு
காண்பரி தாகி நின்ற
சுடர்தனைத் துருத்தி யானைத்
தொண்டனேன் கண்ட வாறே.

திருத்துருத்தி - திருநேரிசை 5.

(i) இதில் பிரதிஞ்ஞை, இடர்கழிதல் இறைவனை ஏத்தல்.

(ii) ஏது—சிவன் அருளுடையான் (கடல்தனி நஞ்சமுண்டான்) அளவற்ற சக்தியுடையான் (காண்பரிதாகி நின்ற சுடர்) ஆகவிருத்தலால்.

(iii) உதாகரணம்—யாது அருளும் பலமுமுடையதோ, அது நமது துன்பம் நீக்க வல்லதாகும்.

(iv) உபநயம்—துருத்தியில் விளங்கும் பெருமான் இத்தகையன்.

(v) நிகமனம்—"இறைவனை ஏத்துமின்" என்னும் ஏவலில் தொக்கிபது.

இவ்வவயவங்களை ஆங்கிலத்தில் தர்க்க வாய்ப்பாட்டில் மூன்று அங்கங்களில் அடக்குவார். S is P if M என்பது ஆங்கில தர்க்க நியாய வாய்பாடு ஆகும். அதில் S is P என்பது பிரதிஞ்ஞை. இம்மலை தீயுடைத்து என்பது ஏது. (M) புகையுண்மையால் ஏனைய உதாகரணம், உபநயம், நிகமனம் தொக்கிருக்கும் சாதாரணம் நாம் பேசுங்காலை இவ்வவயவங்கள் ஐந்தும் வெளிப்படையாய் நிற்பதில்லை. முதலிரண்டே வெளித்தோன்ற ஏனைய மனதின் கண்ணும் சுருங்கியே நிற்கும்.

பாண்டு வின்மகன் பார்த்தன் பணிசெய்து
வேண்டு நல்வரங் கொள்விச யமங்கை
ஆண்ட வன்னடி யேநினைந் தாசையால்
காண்ட லேகருத் தாகி யிருப்பனே.

திருவிசயமங்கை - திருக்குறுந்தொகை 8.

இதில் ஏதுவும் பிரதிஞ்ஞையில் தொக்கிருப்பதைக் காண்க. ஆயினும் இவ்வைந்து அவயவங்களும் ஒன்றினின் றொன்றுவெளியாதல் கவியின் அழகாம்.

இம்முறையில் நோக்குங்கால் திருநாவுக்கரசு நாயனார் பதிகத்திலுள்ள செய்யுள்கள் ஒன்றன்பின் ஒன்று நியாய முறையில் பாடப்பட்டனவாய் விளங்குவதுடன், அப்பதிகமுற்றும் ஒரு தேசியாயும், அதன் செய்யுள்கள் முறையே அவற்றின் அங்கங்கள் இடத்திற்குத் தக்கவாறு அமைந்தது போலும் காணப்படும். இதைப் பரீக்ஷிக்க, மேற்கண்ட பாசுரத்திற்குப் பின்வரும் பாசுரத்தைக் காண்க:—

வந்து கேண்மின் மயறீர் மனிதர்காள்
வெந்த நீற்றன் விசயமங் கைப்பிரான்
சிந்தை யானினை வார்களைச் சிக்கெனப்
பந்து வாக்கி யுயக்கொளுங் காண்மினே.

திருவிசயமங்கை - திருக்குறுந்தொகை. 9.

செந்தமிழ்ச் செல்வி.

விந்துநாத மீதிருப்பாள் செந்தமிழ்ச் செல்வி.
வெண்கமல மேலிருப்பாள் செந்தமிழ்ச் செல்வி
சந்திரனைப்போல் நிறத்தாள் செந்தமிழ்ச் செல்வி
தத்துவங் கடந்துநிற்பாள் செந்தமிழ்ச் செல்வி
இயற்கையொலி யாயிருப்பாள் செந்தமிழ்ச் செல்வி
என்றுமழி யாதிருப்பாள் செந்தமிழ்ச் செல்வி
வன்னவடி வாயிருப்பாள் செந்தமிழ்ச் செல்வி
மன்னுயிரின் நாவுறைவாள் செந்தமிழ்ச் செல்வி
முன்னுள தமிழ்மொழிந்தாள் செந்தமிழ்ச் செல்வி
மூலமொழி யாயிருப்பாள் செந்தமிழ்ச் செல்வி
மாரிபோலும் பூங்குழலாள் செந்தமிழ்ச் செல்வி
வளருமிளம் பிறைநுதலாள் செந்தமிழ்ச் செல்வி
கூருமருட் கண்ணுடையாள் செந்தமிழ்ச் செல்வி
குனிபுருவச் சிலையுடையாள் செந்தமிழ்ச் செல்வி
எட்போலும் நாசியினுள் செந்தமிழ்ச் செல்வி
இன்னமுத மொழியுடையாள் செந்தமிழ் செல்வி
முத்துப்போற் பல்லுடையாள் செந்தமிழ்ச் செல்வி
முருக்கம்பூ விதழுடையாள் செந்தமிழ்ச் செல்வி
ஆடிபோலுங் கன்னத்தினுள் செந்தமிழ்ச் செல்வி
அழகுமணி மிடறுடையாள் செந்தமிழ்ச் செல்வி
கோங்கரும்பு வனமுலையாள் செந்தமிழ்ச் செல்வி
குளிருமுத்து வடமுடையாள் செந்தமிழ்ச் செல்வி
வேய்போலுந் தோளுடையாள் செந்தமிழ்ச் செல்வி
மென்றொடிமுன் கையுடையாள் செந்தமிழ்ச் செல்வி
செங்காந்தள் விரலுடையாள் செந்தமிழ்ச் செல்வி
செய்யதுகிற் கச்சுடையாள் செந்தமிழ்ச் செல்வி
மின்போலு நுண்ணிடையாள் செந்தமிழ்ச் செல்வி
மேகலை யரையுடையாள் செந்தமிழ்ச் செல்வி
ஆலிலைபோல் வயிறுடையாள் செந்தமிழ்ச் செல்வி
அழகுமணி மாலையினுள் செந்தமிழ்ச் செல்வி
உடுத்தபட் டாடையினுள் செந்தமிழ்ச் செல்வி
ஓங்கார வுந்தியினுள் செந்தமிழ்ச் செல்வி
கன்னிவாழை மென்றொடையாள் செந்தமிழ்ச் செல்வி
காமர்கணைக் காலுடையாள் செந்தமிழ்ச் செல்வி
தண்டைகொஞ்சுந் தாளுடையாள் செந்தமிழ்ச் செல்வி
தாமரைப்பூஞ் சேவடியாள் செந்தமிழ்ச் செல்வி
தண்பொதியி லேபிறந்தாள் செந்தமிழ்ச் செல்வி
தவமுனிவன் மடிவளர்ந்தாள் செந்தமிழ்ச் செல்வி
கூடனகர் வாழ்வுகந்தாள் செந்தமிழ்ச் செல்வி
கோவேந்த ரேவல்கொண்டாள் செந்தமிழ்ச் செல்வி
புத்தகஞ்சேர் கையுடையாள் செந்தமிழ்ச் செல்வி
பொற்பளிங்கு மாலையினுள் செந்தமிழ்ச் செல்வி
வீணையிரு கையுடையாள் செந்தமிழ்ச் செல்வி
வேதமுடி வாய்விளைந்தாள் செந்தமிழ்ச் செல்வி
நீரின்மே லேநடந்தாள் செந்தமிழ்ச் செல்வி
நெருப்பினுள் ளேகுளித்தாள் செந்தமிழ்ச் செல்வி
நஞ்சையமு தாக்கிவைத்தாள் செந்தமிழ்ச் செல்வி
நாள்கோள் விலக்கி வைத்தாள் செந்தமிழ்ச் செல்வி
வெய்யபிணி மாற்றிவிட்டாள் செந்தமிழ்ச் செல்வி
வேழமதை யோட்டிவிட்டாள் செந்தமிழ்ச் செல்வி
உண்டமக வைப்பயந்தாள் செந்தமிழ்ச் செல்வி
ஊமைதனைப் பேசுவித்தாள் செந்தமிழ்ச் செல்வி
வள்ளுவர்முப் பால்முடித்தாள் செந்தமிழ்ச் செல்வி
ஆரமணிக் கோவைகொண்டாள் செந்தமிழ்ச் செல்வி
சிந்தா மணிபுனைந்தாள் செந்தமிழ்ச் செல்வி
சேரன்சி லம்பணிந்தாள் செந்தமிழ்ச் செல்வி
மெய்ப்புலவர் வாயினிற்பாள் செந்தமிழ்ச் செல்வி
வேண்டும்வ ரந்தருவாள் செந்தமிழ்ச் செல்வி
பொல்லா வினையறுப்பாள் செந்தமிழ்ச் செல்வி
பொன்மணி தான்சொரிந்தாள் செந்தமிழ்ச் செல்வி
செய்தபி ழைபொறுப்பாள் செந்தமிழ்ச் செல்வி
தேடிவந் தேயருள்வாள் செந்தமிழ்ச் செல்வி
நினைத்தவு டன்வருவாள் செந்தமிழ்ச் செல்வி
நின்றுகவி பாடிடுவாள் செந்தமிழ்ச் செல்வி
என்றென்று போற்றிசெய்யச் செந்தமிழ்ச் செல்வி
இடர்நீக்கி யாண்டனளே செந்தமிழ்ச் செல்வி.

அறிக்கை:—கலாநிலயத்தில் மதிப்புரை வரைவதற்குப் புத்தகம் அனுப்புவார் ரூ. 10 கட்டணம் செலுத்த வேண்டும். அப்பொழுதே புத்தகத்தின் குணங்களையுங் குற்றங்களையும் ஆய்ந்து எழுதுவோம். இல்லையேல் புத்தகத்தின் வரவுமாத்திரம் குறிக்கப்படும்.

திருக்குறள் நீதி

3. துறவறவியல்

[793-வது பக்கத் தொடர்ச்சி]

1. அருளுடைமை

1. அருட்செல்வ மொன்றே யருஞ்செல்வ மாகும்.
2. நன்னெறி நின்றார் நண்ணுவ தருளே.
3. அருளா ளர்க்கிலை யிருள்நர கெய்தல்.
4 உயிரோம்பு வானைத் துயர்சேர்வ தில்லை.
5. கருணையின் மாட்சிக் கிவ்வுலகே சாட்சி.
6. அநியாயக் காரனே அருளற்ற பாவி.
7. மருள்கொண்ட மாந்தர்க்கு மறுமையிற் றுன்பம்.
8. அருணின்று நீங்கினார்க் கொருநாளு முய்வில்லை.
9. அருளில்லா தானமும் அறமாவ தில்லை.
10. வலியார்முன் றாழ்வீர் மெலிவார்முன் வீரமேன்.

2. புலால் மறுத்தல்

1. பிறிதொன்றி னூனுண்பான் அருளில்லா னாகும்.
2. ஊனுண்பாற் கில்லை வானாட்டுச் செல்வம்.
3. புலானுண்பான்மனத்தருள்குலாவாதெந்நாளும்
4. அருள்சே ரகத்தான் கருதான் புலாலை.
5. ஊனுண் பானை உமிழாது நரகம்.
6. கொன்றுண்ணா வூரிற் சென்றான் பகரார்
7. உண்ணான் புலாலைப் புண்ணாக் கண்டவன்.
8. அறிவறிந்தா ருண்ணார் பிறிதுயிர் நீத்தவூன்.
9. ஊனுண் ணாமை வேள்வியிற் சிறக்கும்.
10. கொன்று தின்னானைச் சென்றிறைஞ் சுமுயிர்.

3. தவம்

1. தவசிக் கழகு தன்னை யொறுத்தல்.
2. முந்தைநாட் டவமே யிந்தநாட் பேறு.
3. தவப்பசி மாற்றுவான் தவஞ்செய வேண்டா.
4. அவதூறு செய்தாரைத் தவநீதி கொல்லும்.
5. வேண்டிய வேண்டின் ஈண்டும் முயல்தவம்.
6. அவச்செய லஞ்சின் தவச்செய லாகும்.
7. சுடச்சுடப் பொன்போல் நோற்பவ ரொளிர்வார்.
8. தன்னையுணர்ந் தானை மன்னுயிரெலாந் தொழும்.
9. நோற்ற லுடையாரைக் கூற்றமு மஞ்சும்.
10. இலர்பல ராதல் சிலர்பலர் நோற்றிலார்.

4. கூடா வொழுக்கம்

1. வஞ்சக நெஞ்சத்தானை ஐந்துஞ் சிரிக்கும்.
2. மனத்தூய்மை யின்றேல் தவத்தூய்மை யின்றாம்.
3. வேடத்தில் மறைந்து தோடத்தைச் செய்யற்க.
4. தவவேடம் பூண்டு பவமூட்டை தேடற்க.
5. விருப்பற் றேமென வீண்பழி நாடற்க.
6. நெஞ்சிற் றுறவார் வஞ்சமே கொடிது.
7. அகத்தழுக் குற்ற தவத்தோ ருமுளர்.
8. மாசற்றார் போலப் பூசிப்பா ருண்டு.
9. மயலற்ற துறவியைச் செயல்கண்டு அறிக.
10. வேடம் வேண்டா தோட மகற்றின்.

5. கள்ளாமை

1. களவற்ற நெஞ்சிற் கிழிவொன்று மில்லை.
2. உள்ளத்தா லுள்ளினுங் கள்ளச் செயலாகும்.
3. களவாண்ட செல்வம் உளதாகிக் கெடும்.
4. பேராசைச் சோரந் தீராத கோரம்.
5. திருடக் கருதா ரருளிற் பெரியோர்.
6. திருடர்க் கில்லைத் தருமத் தெண்ணம்.
7. வெள்ளைக் கில்லைக் கள்ளச் சிந்தை.
8. கனவினுங் கள்ளர்க்குக் கள்ளமே கருத்தாம்.
9. பட்டிமைப் பழக்கங் கிட்டிய நாசம்.
10. கரவுடை நாட்டம் மறுமைக்கும் வாட்டம்.

6. வாய்மை

1. தீமையில் சொல்லே வாய்மையென லாகும்.
2. பழுதீனாப் பொய்ம்மை வாய்மையினை யொக்கும்.
3. நெஞ்சறிந்த வஞ்சவுரை நஞ்சுண்ட படியாமே.
4. உள்ளத்தாற் பொய்யானைக் கொள்ளுமே யுலகம்.
5. மனத்தொடு வாய்மையே தவத்தொடு தானம்.
6. பொய்யாமை தானே மெய்யான கீர்த்தி.
7. பொய்யா விரதியே மெய்ஞ்ஞான தேவன்.
8. மனத்தூய்மை வேண்டின் மாயங்கள் கூறற்க.
9. பொய்யாமை சான்றோர்க்கு மெய்யான் விளக்கு.
10. வாய்மை யல்லது தூயதொன் றில்லை.

7. வெகுளாமை

1. செல்லிடங் காப்போன் சினங்காப் போனே.
2. செல்லா விடத்துஞ் சினந்தீ தாகும்.
3. கோபத்தை மறந்தவன் பாபத்தில் வருந்தான்.
4. நகைமுகங் கெடுக்கும் பகையெனல் சினமே.
5. கோபத்தைக் காவார் ஆபத்திற் குள்ளாவர்.
6. சினத்தீ தானே யினத்தையுஞ் சுடுமே.
7. கடுங்கோப முடையோர் கெடுவது திண்ணம்.
8. வெகுதீங் குறினும் வெகுளாமை நன்று.
9. சினத்தைக் காப்போன் நினைத்தது பெறுவான்.
10. சினத்தீ மூடரைச் செத்தா ரொடுவை.

8. இன்னா செய்யாமை

1. பெருநிதி வரினும் பிறர்க்கின்னா செயற்க.
2. கறுத்தின்னா செய்யினும் மறுத்தின்னா செயற்க.
3. துன்னாதார் மாட்டும் இன்னாத செய்யற்க.
4. துன்னலர் நாண நன்னயஞ் செய்க.
5. பிறிதின்நோ யுணரா வறிவினாற் பயனில்லை.
6. துன்னற்க தீவினை இன்னற் கிடமெனில்.
7. யார்மாட்டுஞ் செய்யற்க கோரக் கொடுவினை.
8. தனக்கின்னா தறிவான் பிறர்க்கின்னா செய்யான்.
9. முற்பகற் றீச்செயல் பிற்பகல் விளையும்.
10. உயிர்க்கூறு நாடார்க்குத் துயர்ச்சோக மில்லை.

9. கொல்லாமை

1. யெல்லா வறமும் கொல்லாமை தானே.
2. பல்லுயிர் காத்தல் பாரினில் மேலறம்.
3. கூறற்க வஞ்சம் கூடற்க கொலைப்பழி.
4. நல்லா றேதெளிற் கொல்லா விரதம்.
5. கொல்லாமை யாற்றிப் பொல்லாப் பிறப்பறு.
6. கொல்லா விரதிபாற் கூற்றணு காது.
7. தன்னுயிர் நீப்பினும் மன்னுயி ரோம்புக.
8. கொன்றாகு மாக்கம் நன்றாகா தாகும்.
9. கொலைசெய் பவரே புலைய ராவார்.
10. கொலைத்தொழி லாளரைக் கொடுவினை சூழும்.

10. நிலையாமை

1. புற்புதக் காட்சி பொத்ததிவ் வாழ்க்கை.
2. கூத்தாட் டவைபோற் குலையுமே செல்வம்.

3. செல்வ மழியுமுன் செய்வது நல்லறம்.
4. உடலுயிர் பிரிக்குங் கருவியே நாளாம்.
5. விக்கிநா விழுமுன் விரைந்துசெய் தருமம்.
6. நேற்றுளா ரின்றிலாத் தோற்றமிவ் வுலகு.
7. வாழ்வதறியார் மற்று நீளநினைப்ப தனந்தம்.
8. குடம்பையுட் பறவை உடம்புயிர் நட்பு.
9. உறக்கம்போற் சாக்காடு பிறப்பொக்கும் விழிப்பு.
10. உயிர்க்கோ ருறுதியா முடம்பில்லை யென்க.

11. துறவு

1. விட்டதொன் றெவரையுந் தொட்டுநோய் செய்யா.
2. கடுவெனப் பொருளை விடுவதே யின்பம்.
3. ஐம்புல னடக்கி யாசையை யகற்று.
4. குற்ற மற்றார்க்குப் பற்றென்று மில்லை.
5. பிறப்பறுப் பார்க்குடல் சிறப்புடைத் தன்று.
6. எனதென்ற தற்றால் தனதாகும் வீடு.
7. பற்றொழி யாரைப் பற்று மிடும்பைகள்.
8. பற்றறு பிறவியைக் குற்றமணு காது.
9. துறந்தார்க் கல்லது நிறைந்தவீ டில்லை.
10. பற்றை யறுக்கப் பற்றுக பரனை.

12. மெய்யுணர்தல்

1. மயக்க வுணர்வே பயப்பது துன்பம்.
2. மெய்ஞ்ஞான வுணர்வே மேலான வின்பம்.
3. ஐயந் தெளிந்தால் வையத்துள் முத்தி.
4. மெய்யுணர்ச்சி யில்லார்க்கு மேற்பதவி யில்லை.
5. எப்பொரு ளாயினு மெய்ப்பொரு ளாய்க.
6. கற்றுணர்ந் தடங்க உற்றநோய் தீரும்.
7. ஆய்ந்தறி வார்க்கு ஒய்ந்திடும் பிறவி.
8. பிறவிப் பிணியற உணர்வதே அறிவு.
9. உற்றநோ யறிந்து பற்றற வொழுகுக.
10. மெய்யுணர்ந் தார்க்கு மொய்துய ரில்லை.

13. அவாவறுத்தல்

1. பிறப்புக்கு வித்துப் பேரவா வாகும்.
2. பிறவாமை வேண்டின் பொருளாசை நீக்குக.
3. வேண்டாமை தானே விழுச்செல்வ மாகும்.
4. வாய்மை வேண்டத் தூய்மை யுண்டாம்.
5. அவாவற் றவரே அறுப்பார் பிறவி.
6. வஞ்சிக்கு மவாவை அஞ்சுவர் அறவோர்.
7. ஆசை யறுப்பார்க் காகுந் துறவறம்.
8. ஆசையற்றா லின்பம் நேசமுற்றாற் றுன்பம்.
9. அவாவற் றிருக்க வானந்த முண்டாம்.
10. அவாவற்ற நிலையே யானந்த முத்தி.

துறவறவியல் முற்றிற்று.

ஊழ்

1. ஆக்குமூ ழூக்கம் போக்குமூழ் மடியே.
2. அறிவறி யாமை யாவது மூழே.
3. நூல்பல கற்பினு மூழ்வலி யேமிகும்.
4. அறிவுஞ் செல்வமு மிருவகை யூழ்வலி.
5. நல்லவை தீயவாம் செல்லூழ் வருங்கால்.
6. வருந்தினு போகா பொருந்துமூ ழூற்றால்.
7. வகுத்த படியலால் தொகுத்தார் துய்த்திடார்.
8. வறியரையுந் துறவாம லூழ்வலி தடுக்கும்.
9. ஊழ்வலி யுணர்ந்தார் தாழ்வதில் வருந்தார்.
10 ஊழ்வலி யொப்பதோர் காழ்வலி யில்லை.

அறத்துப்பால் முற்றிற்று.

பொதிகை நிகண்டு

[812-வது பக்கத் தொடர்ச்சி]

ஒன்பதாவது

செயல் பற்றிய பெயர்த்தொகுதி

தொழிற்கருமங் கன்மம்விதி செயல்வினைப்பே ரைந்தாந்
தொழிற்பயில்வு தொறுவாங்கா தரம்வினையின் றுடர்
இழைத்தல்பா ரித்தனிரு மித்தலே குயிற்ற [வாம்
லியற்றலய ருதல்வினைத லாற்றல்செய லெட்டாம்
பழக்குசிட்டி சிருட்டிபிறப் பித்தல்படைத் தலின்பேர்
பண்ணைகெட வரல்பொய்தல் வண்டலுண்டாட் டோ
யுழக்கிய விலாசனை கிரீடையுப்புக் கேளி [ரை
யொன்பதொன்றும் பெண்கள்விளை யாட்டின் பேர்

விரிபொழுது போக்குவிளை யாட்டுப்பா ராட்டு [விரிவே.
மெய்ச்சல்விழை தங்களித்தல் குலவல்கொண்டாடலின்
வரைதல்கடி கைப்பற்றன் மணம்வேட்டன் மன்றல் [பேர்
வதுவைதீ வலஞ்செயல்கல் யாணம்விவா கப்பேர்
முருகுதுணங் கறல்விழாச் சாறுபுத்தேள் சேறு
மூவிரண்டுச் சபத்தின்பேர் மலரடைச்சல் செருகல்
சொருகலாம் வினைவணிவொப் * பனைமலைச்சன் மிலைதல்
சூடல்வேய் வலங்கரித்தல் புனைவுமண்கை செயலே.

கைதொடல்போ சனந்தின்றல் பொசித்தறுவ்வன் மிசை
கவ்வல்பா ரணந்துற்ற லுணல்பருகன் மாந்தல் [தல்
துய்த்தினலே யமுதுசெய்த னுகர்வயிற லார்தல்
துப்பருந்த லேதுய்த்த லுண்டலெழு மூன்று
முய்துநுங்கல் விழுங்குதற்பேர் துயில்கணு வளர்த [தல்
லுறங்கல்பள்ளி துயிறல்படல் கண்ணடைத்த லனந்

* பனைமிலைச்சல் மலைதல் (பி - ம்)

வெய்துறுகண் படைதுஞ்ச னித்திரைதூங் கலின்பேர்
விடிந்தெழுப்பலெடுத்தலேதெளித்தற்பேர்ப்பொருளே.

பொருமல்விம்மல் கசிவுரோ தனமிரங்க லேங்கல்
புழுங்கல்கலு ழுதல்கலக்க மொன்பதழு தலின்பேர்
தருதல்கொடை வீசல்கடப் பாடுதெ லிகுத்தல்
தானம்வண்மை வேளாண்மை பகுப்புதவல் வேள்வி
அருளலுப காரநல்கல் விதரணந் தியாக
மளித்திட லுதாரம்வழங் குதல்பொழித லீகை
விரவுபணித் திடனீட்டல் கவிகைசிவி கையுமாம்
வேந்தர்வரை யாதுகொடுத் திடுதல்கொடை மடமே.

மடக்கல்குத்திமுடக்கநொறில்முணங்கொடுக்கம்பாந்தம்
வலிதடக்கம் பதுங்கலுமாம் † வதிதல்வைக விறுத்தல்
விடுத்தலிறை விசித்தலல்க ருழ்தலுந்தங் கலின்பேர்
விடுத்தன்மோ சனமோக்கந் தீர்த்தலுயிர்த் தலுமாம்
இடுக்கல்பெற்றி யிழிவாமீக் கோளிவரே றுதலா
மிறங்கல்சுத மவதாரங் குனிவுகுரங் கலுமா
முடற்றல்சொலித் திடலாம்வீ சுதல்விலங்க லிடுத
லோச்சலெறிதலின்பேராம் பூய்த்தல்பிய்த்தல் காணே.

காண்டறெரி சனநோக்கல் கண்ணுதலே பார்வை
காட்சிபார்த் தலின்பேராஞ் சிறக்கணிப் பபாங்க
மீண்டுகடைக் கணித்தலாஞ் சரிதையையம் பிடிக
மிரந்தபிண்டம் பலிபாகம் பயிக்கமும்பிச் சையின்பேர்
வேண்டல்குறை ‡ கோளேன்றல் வாங்கலிறத் தலின்பேர்
வேண்டாமாற் றுதல்காத்த னிறுத்தன்மறுத் திடலாந்

† வதிதல் வைக (பி-ம்) ‡ கோளேற்றல் (பி-ம்)

தோண்டலக முதல்கிளைத்த $ ஞெண்டறெுட்டல் பிளிற
றொடுதல்கிள றுதலுமாம் பிடித்தல்பற்ற றொடலே.

தொடுத்தல்பந்தம் யாப்பசைப்புச் சிமிழ்ப்பார்த்தல் வீக்க
றுறுவிசித்தல் பிணித்தல்கட்ட லொன்பதாங் கதுவாய்
வடுப்படலாம் விளம்பல்பா ரித்தலாம் பிறக்கு
வழுக்கயக்குச் சோர்வாகு மெறிதலெற்றல் குற்றல்
புடைத்தலுமாம் புடைத்தலே தகர்த்தல்குட்ட லாகும்
புதைத்தலே பொதிர்ப்புவீக் கமுமாகும் வதைத்த
லடித்தலே யறைதலெற்றன் மோதலழுத் துதலு
மதுக்கலுமாங் தூய்தாக்கல் சீய்த்தலாங் தெரியே. 330.

தெரித்தல்வரைங் திடல்பொறித்தல் கீறலே தீட்டல்
சிவக்கல்வரித் தலுமெழுத லாங்கணக்கி லேகை
வரித்தவரி பொறிபோய ¶ மிலிகிதமா காதம்
வன்னமெழுத் தக்கரமாங் கீழ்த்தல்குற்ற றேய்த்தல்
அரக்கல்சிதைத் தலின்பேர்மஞ் சனங்தோய்தல் குளித்த
லாடல்படி தலுநானஞ் செய்தலின்பேர் தேய்த்த
லுரைத்தலுரிஞ் சலின்பேரா மிமிழ்த்தலே தெவிட்ட
லுமிழ்த்தலுமாம் பறித்தல்குற்றல் களைத்தல் கட்டல்
[வழியே.

வழிபடலற் சனையாரா தனையேபூ சனைப்பேர்
மகம்யாகங் கிருதோம மிட்டியெச்சம் யூபம்
பழியில்வேழ் வியின்பேர்வங் தனைவணங்கல் காணல்
பணிதல்வங் திப் பிறைஞ்சல்பணி தாழ்தலுங்தெண்
[டனின்பேர்

தொழுதலுங்கை கூப்புதலஞ் சலியொடுகும் பிடற்பேர்
சுகத்தாடல் சம்போக மைதுனங் கிரீடை
விழைவுபுல்லுக் கலவியாலிங் கனமே கூட்டம்
விழைச்சியைதல் புணர்ச்சிமணங் தழுவன்முயங்குதலே.

முயங்கிடத்திற் கூடியுமே கூட்டமில்லா திருத்தன்
மொய்த்தொரு புலவியா மணுகாம லீளமனோர்
மயங்கவுரை மறுத்தலே யூடலென வுரைப்பர்
மகிழ்நர்பிரிங் ததற்பின்னர் வாயிலடைத் திருத்தல்
இயங்குதலில் லாத்துனியும் புலவிநீட் டமுமாம்
இவ்வூட லொழிதலின்பே ருணர்தலொல்ல லாகும்
நயங்கொளும்பா டினிமுதலோர் புலவியொழிங் திடவே
நவின்றுவேண் டுதல்வாயி லென்றுபரிங் துரையே 333.

பரிதலிசித் திடன்ஞெமிர்த லொடிதலே யிடிதல்
படவிறுத்த லிறுதலொசித் திடலகைத்தன் முறிதல்
முரிதலின்பே ரூழ்த்தன்மூ டுதல்கவித்தல் பாத்தல்
மொஞ்சல்மூ சுதலேங்தாங் கூசல்மட்கல் கெடுத
லிரிதலுடை வேதிட்க னெரிதலே ஞொள்க
லிடைவுதொங்கல் சாய்வுசரி தலுமோட லாகும்
அரிதல்சே திித்தல்விடு வாய்கெய்தல் சூலல்
அறுத்தல்கொய்தல் கத்தரித்த லீர்த்தலதின் பகுப்பே.

பகுத்தலெற்றல் கண்டித்த றறித்தலே துமித்தல்
பரிதலே தடித்தல்வெட்ட லேழாகும் விரிய
லிகுத்தல்பரப் பலின்பேராங் தணித்தல்செம்மித் தலின்
எருக்கல்கா துதல்சவட்டல் மாரணஞ்சட் டித்தல் [பேர்
செகுத்தல்வீட் டுதல்படுத்த லொழித்தலெற்றல் கோறல்
செவிட்டல்முருக் குதல்பன்மூன் றுங்கொலை செய்
[தலின்பேர்
அசைத்தலுமா மூறணங்கு கோள்வேட்டங் கொலையா
மமர்வேட்டை பற்றியதா மமுக்கன் ஞெமுங்குதலே335.

குதித்தலின்பேர் மிதித்தலுக ளுதல்பாழ்த லுறுக்கல்
குப்புறலா முகைத்தலும்பல் கஞறலோ பொதுங்கல்
கதித்தலே பொலிதல்பாச் சலுமெழுச்சி யதின்பேர்
கதழ்வுவல்லை கதனமொல்லை துரியநொறில் கடுப்பு

$ னெண்டறெுட்டல் (பி - ம்)
¶ மிலகிதமா (பி - ம்)

விதப்புவிசை கடுகல்சண்ட முடுகல்ஞெள்ளல் கோரம்
வேகஞ்சீக் கிரஞ்சடுதி குத்திரமே கவன
மதிர்த்துனைவு துவறலொடு தாரைவிரை வின்பேர்
அறுமூன்று நான்குமெல்கல் தாழ்த்தல்மந்த முறலே.

உறல்பொருந்தல் மருவலண்ண லிசைவுநண்ணல் யோக
மொல்லலிசைப் பணுகல்சிவ ணுதலல்க லியைவு
பெறலணவல் சார்வுதொட றுன்னல்கூ டலின்பேர்
பிரிவுணர்வு வரைவுவல்லி தணப்பொருவல் துறத்தல்
துறவிகடி நீங்கலொன்பான் குயிறலே தோளல்
துளைத்தல்திளைத் தலுமாங்தா பித்தனிலை செய்தல்
நிறுவறேன் றலுநிறுத்த லாங்தடவல் வருட
னீவலுங்தை வரலுமென மொழிவர்பா வலரே.

வலத்தல்வா ரணநிணத்த லாணைதட்டல் முடைதல்
மாற்றல்வா ரித்தலொடு தடைதடுத்தல் தகைதல்
விலக்கலின்பேர் நெகிழலொல்லல் குழைவின்பே ரேவல்
வியங்கோளாங் கண்டேதி சொறியிரண்டுங் தினவாம்
பலித்தல்கிடைத் திடல்வாய்த்தல் பயப்பீன்றல்பெறலாம்
பரிசனங்தொட் டிடலூறு துவளல்திவ ளலுமாங்
கலத்திடல் வளாவுத லளாவுதல் துளாவல்
கலம்பகஞ்சங் கீரணங்கலாவலுமென் றியலே.

இயற்றலுத்தி யோகமுஞற் றூக்கங்தா ளாண்மை
யியலுழப்புச் சாயமாள் வினைமுதுமை தாள்வு
முயற்சியதாம் பேராண்மை யருமையிட லோங்கி
முடித்தலூ ராண்மையதா மூண்டாதல் பூத்தல்
பயத்தலுமாம் பிறகிடலே பிறக்கிடல்பின் றலுமாம்
பா டீடு பெய்தலளித் திடல்செறித்தல் மூன்றும்
வெயர்த்தலே கசிவுவேர் வாஞ்சுவே தமுமாம்
விற்றல்பக ருதல்மாறல் நொடைவிலைசெப் பகவே.

வேயெனுஞ்சொல் லொற்றுரு ஞொள்கல்சிங்கல் போகல்
மெலிவுகிரி சங்தேம்பல் நாம்பலிளைத் தலின்பேர்
காய்தல்வறத் திடல்முளித்த லுலறல்முதிர லுமாம்
காலலுமிழ்த் திடல்பில்கல்பிளிற்றலுங்கொப் பளிப்பாம்
மாய்தலே வரணமிவை மறைதலாங் தெற்றல்
மாறுபா டாம்பொல்லங் துன்னமாஞ் சுங்க
மாயமே யுல்குசா ரிகையுமாம் பிணக்கே
யரில்வாரங் துவக்குமற ஞற்பேரா வனவே

ஆவிவிடல் மாளுதல் சமாதிபொன்றல் முடித
லவன்றல்யோ கங்தபுத லிலலிறத்தல் மரணம்
வீவுதுஞ்சல் மாய்வுமுஞ்சல் சாவுமூ வைங்தாம்
விளிவுமாம் பரிகரிவக் கிரமாறல் சேறல்
தாவுமீண் டிடலேங்தாஞ் சம்பிரதஞ் சித்தாங் [லின் பேர்
தரித்தல்பரித் திடல்பொறுத்தல் தாங்கல் சமத்த
வாவரு வுதல்கடத்தல் தாண்டல்தத்த லாகும்
வளைத்தல்சுற்றல் சூழுதல் வளாகமெனத் தெருளே.

தெருட்டலுடன் வருட்டலும்வற் புறுத்தலாம் வரன்றல்
தெள்ளல்கொழித் திடலாகும் பூட்கைமேற் கோளா
முருத்தல்பொடித் திடஞறன் முளைத்தலா றூக்க
லூன்றஞென்ற லுங்தள்ள லாம்பாது காத்தல்
புரத்தனிலை பெறலோம்பல் திதிநோக்கங் காத்தல்
போற்றலுமா மரண்காவல் கட்டிகத வேம
மிருட்கடியே வேலிசே மமுங்காப்ப தாகு
மிளைதலைகா வற்பெயரென் பார்தமிழ்ச்சொல் பவரே.

பவனிக்கே பேருலாப் போதலாம் வழங்கல்
பயிறலுல வலின்பேராங் தூய்மைசெய்த லுடனே
யுவனித்த லிரண்டுமுவ லாளனத்தின் பேரா
முவளலசைங் திடறிவண்ட லொசித்தறுவண் டிடலா
மவுனப்பேர் மோனம்வா ளாகோளா வாகும்
வரியிறை கறைகடனுங் கரங்குடியு மிறுப்பாங்
குவிதற்பேர் சாம்பல்கூம் பலுமொடுங்க லாகுங்
குறைதிறைகப் பமுங்தெவ்வர் பாகுடத்தின் கவர்ப்பே.

கவர்தலே குடைதன்ஞெலி தலுங்கடைத லாகுங்
கட்டலே சோர்வுபட்டி கரவுகர வடமே
சவுரியமே படிறுதிருட் டொகெள்ளல் கரப்புச்
சாங்கந்தே யங்களவு தேனுவுமே களவாம்
துவர்தல்கீ றுதல்கீழ்தல் கீண்டல்வகிர் பிளத்த
றுணிகீன்றல் கீறல்போழ்ந் திடல்பீறல் கிழிவாம்
நவிதலவித் திடனதுத்த ஞெதுத்தலுமற் றதற்கா
நாடனே டுதறுருக்கை யரிக்கொளல்தே டுதலே. 344.

தேடுமல மரல்சொரிதல் மறுகன்ஞொட்க றிரித
றெருமரலே பிரமரிசூர்த் தலுஞ்சுழற லாகு
மோடனீ ளுதனீண்ட னிமிர்பாற னீட
லோராரு நேரோட லாதிவீ தியுமாம்
வாடலில்வெம் பரியோட்ட மண்டிலமே சாரி
மாதிவா ளியுமாகும் பாதீடு தான்பங்
கீடுபகுப் பேபாத்துப் பாகமும்பங் கிடலா
மேற்படலொட் டுதல்வலித்த னேரலுடன் படலே.

படர்ச்சியிவ ருதலேக லொதுக்கமில்லல் சேறல்
படர்தலியங் குதல்வழங்கல் † போதலா மிறத்தல்
கடத்தல்விடுத் திடல்பிரிதன் மறுங்கலே தணத்தல்
கழித்தலிகந் திடனீங்கநீர் தன்மூ வேழு
நடப்பதாங் கவர்தல்வவ்வல் கொளலும்வா ருதலா
‡நறிதாக்கன் முண்டிதமே மழித்தல்சமைத் திடலே
வடித்தலின்பேர் நுடக்கலே துவட்டலா மூட்டன்
மாட்டல்பொத்த லிரண்டாகுஞ் சரணமறை புகலே.

மறனிகல்சல் லிகம்பூச லார்ப்பமர்தெவ் வுடன்றல்
மலைப்பிரணந் தாக்கோறல் கிடைத்தன்ஞாட் பேற்றல்
செறல்முடுகல் போர்பொருத லாயோதந் தும்பை
தீய்த்தல்வினை முரண்கூட்ட மொய்செருநேர் கிட்டன்
முறுகலா கவஞ்சமமே தலைப்படன்மண் டுதலே
முட்டல்சமர் சங்கிரா மஞ்சண்டை யிடற்பேர்
உறவின்மேற் சாராமை தழிஞ்சியாம் பகையை
யொறுத்தல்வள்ளை யாஞ்சுடல்சந் தாபந்து பிதமே.

தூவலுகுத் திடல்சிதர்த்தல் *சிதந்தலூழ்த் தலுமாந்
தூண்டலெய்த லுகைத்தனட வுதல்கடவல் கைத்தல்
ஏவலுய்த்த லொட்டலூர்ந் திடல்செலுத்தல் பத்தா
மிடைவெட்டா றலையதர்கோள் வழிப்பறியாம் வழியின்

மாவெதிர்ப்பாற் றுப்படையாந் தரல்கொடுபோ யிடலாம்
வலியழித்த லாற்றறுத்த லேமடித்த லுழற்ற
லாவதுமுழக் குதலாகு ஞெகிழ்தன்ஞொள்க லலைய
லாஞ்சியலை சலின்பேரா மென்றுநா டுகவே. 348.

நாடகந்தாண் டவங்கண்ணுள் *வாணிநடி நிருத்த
நடநடனம் படிகநாட் டியந்தூக்குத் தூங்கல்
ஆடலா லுதல்பெயர்த லகவனடை நடித்தல்
அசைவேநட் டணையாட்டுக் கூத்து மூவேழாம்
பாடிலையம் பித்தம் வீரட்டானங் கடகம்
பவுரிகர ணம்பரதம் பிரமரியே புரிய
மோடலைப்புள் ளாளங்கூத் தினில்விகற்பாம் பழக
லுழத்தல்பரு மித்தல்சிர மஞ்செய்த னடையே. 349.

நடனமதூற் கொடுகொட்டி தாண்டவம்பாண் டரங்க
நந்திகூத் தாங்கபா லமுமாமால் கூத்தே
குடமல்லோ டல்லியமாம் பாவைசெல்வி கூத்தாம் [கால்
குடைதுடிசேய் கூத்தாந்துற் கையின்கூத்து மரக்
கடையமே சசிகூத்தாம் பேடுமதன் கூத்தாங்
கருதுதுடி யேழ்மாதர் கூத்திருக்கை பழூவின்
புடையொற்ற றுணங்கையதாங் குரவைகைகோத் தாடல்
புதுவெறியாட் டணங்குவெறி கழங்கும்வாய்த் தனவே.

வாயினிற்கை $ யாற்றட்ட லாவலங்கொட் டுதலாம்
வட்டித்த லொற்றறுத்தல் வட்டணைதட் டலுமாம்
ஆயகுடங் கைகொட்டிக் குவித்தல்கொம்மை செங்கை
யதைக்குவித்துக் கொட்டலாந் தாளவொத்துச் சதிசீ
ரேயதுவாங் குடந்தங்கை கூப்பிமெய்யைக் கோட்ட
லேகபதங் குந்தித்தல் குஞ்சித்த லாகும்
பாயுமசைத் தலின்பேரே துயலவரலொ டசைதல்
பாழல்சொரியலுமாகு நாற்பெயரொற் றுமையே. 351.

ஒற்றலுடுத் தலின்பேராங் கொட்டலே சாத்த
லுடன்சதுர்த்த லப்பலின்பேர் மூன்றாகும் பூசல்
தெற்றுபுலர்த் துதல்வரித்த லிரண்டாகும் வைத்தல்
தெறுத்தல்நெரித் தலின்பேரு மிரண்டாகு மிறுக்கல்
தற்றுதலாங் கொள்ளைகொண்டி குறையா முரோசல்
சார்ந்துராய்ப் போதலுரிஞ் சுதலாஞ் சுவாச
மற்றும்மல் மூச்சாமா வித்தல்கொட்டா வியின்பே
ரலதுமிழ்த்த லூற்காரங் காறல்சத்தி யகல்வே. 352.

† போதல் செலவிறத்தல் (பி - ம்)

‡ நனமழிதாககல முண்டிதமா மாககததல சமைத் திடலே (பி - ம்)

* சிதந்தலுரைத் (பி - ம்)

* வாணிநட்ட (பி - ம்)

$ யரற்ற (பி - ம்)

ஒன்பதாவது செயல்பற்றிய பெயர்த் தொகுதி முற்றும்.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

டானிக்குகள் :		தைலங்கள் :	
பாதாமி லேகியம்	ரூ. 3-0-0	சந்தனாதி 6 அவுன்ஸ்	ரூ. 1-0-0
ரதிவல்லப லேகியம்	2-0-0	அமிர்தாமலக ,,	0-12-0
மஹா திராக்ஷாதி லேகியம்	2-0-0	பிருங்காமலக ,,	0-12-0
குழந்தைகளுக்கு		ஸ்திரீகளுக்கு	
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை	0-4-0	ஸூதக டானிக்	2-0-0
பால சஞ்சீவினி	0-4-0	கர்ப்பாசய டானிக்	2-0-0
பால ஸுதா (டானிக்)	1-0-0	ப்ரஸவ லேகியம்	1-8-0

சத்வைத்யசாலை நஞ்சன்கூடு

நஞ்சன்கூடு பல்பொடி

I. D. L. ச்யாவனப்ராச — சிறந்த டானிக் — சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு

மூலிகைசோந்த சிற்றுமணக்கு எண்ணை. காஸ்ட்ராலஜன்

ஜவரேக் — லோல் எவ்வித ஜ்வரங்களுக்கும்

[பஸ்பங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்.] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

சென்னைத் தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியர் திருவாளர் S. வையாபுரிப் பிள்ளையவர்களால்

— பதிப்பிக்கப்பெற்ற நூல்கள் —

தமிழகராதி ஆதார நூற்றொகுதி
நாம தீப நிகண்டு.

நிகண்டுகளின் வரலாறு, ஆசிரியரது காலம், நூலின் நயங்கள், முதலியன அடங்கிய சிறந்த முன்னுரை கொண்டது. பொருட் பெயர்களை விளங்கக் கூறும் செவ்விய உரைபாடமுள்ளது. நூலின்கண் வந்துள்ள பொருட்பெயர்களனைத்தையும் முற்ற வுணர்த்தும் அனுபந்தம் பெற்றது. சுமார் 12000 சொற்கள் கொண்ட சிற்றகராதியாக உதவுந் தகையது.

விலை ரூபா 2-0-

அரும்பொருள் விளக்க நிகண்டு.

சிறந்த ஒரு சொற் பல்பொருள் நிகண்டு. நிகண்டுகளின் வரலாற்றினை விளக்கும் விரிந்த முன்னுரையுடன் கூடியது. சொல்லின் பொருள்களை யெளிதாகத் தெரிந்துகொள்ளுதற்குப் பலபொருளொருசொல் லகராதி சேர்க்கப்பட்டுள்ளது. விலை ரூபா 1-4-0

கம்பராமாயணம்—உயுத்தகாண்டம்.

முதல் மூன்று படலங்கள்: பல ஏட்டுப் பிரதிகளை ஒப்புநோக்கித் திருத்தியது; பாடபேதங்களனைத்துங் கொடுக்கப் பெற்றது. விலை ரூபா 0-6-0

திருக்குறள்

மூலமும் சொற்குறிப் பகராதியும் விஷய ஒப்புக்குறளும்
(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக் குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துளது மாணுக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று. விலை அணு 0-12-0

களவியற் காரிகை.

ஒரு சிறந்த அகப்பொரு ளிலக்கண நூல்; முதன்முறை இப்போதுதான் அச்சில் வெளிவந்தது. கிடைத்தற்கரிய பல அரிய நூல்களிலிருந்து எடுக்கப்பெற்ற மேற்கோள்களை யுடையது; பல அனுபந்தங்களையுடையது. தமிழாராய்ச்சியாளர்க்குப் பெரிதும்பயன்படுவது. க்ரௌன் அளவில் 170 பக்கங் கொண்டது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா 3-0-

நூற்பொருட் குறிப்பு.

1. இறையனர் களவியலுரை; 2. குறுந்தொகை; 3. திருக்கோவையார்; 4. நற்றிணை; 5. களவழி நாற்பது; 6. தேவாரம்; 7. வீரசோழியம்; 8. நாலாயிர திவ்யப் பிரபந்தம் முதலிய எட்டு நூல்களின் பொருட் குறிப்பு அடங்கியது. தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் தலைமைப் பண்டிதர் ஸ்ரீமான் மு. இராகவையங்காரவர்களால் தொகுக்கப்பட்டது. டெம்மியளவில் 175-பக்கங்கள் உடையது. இலக்கிய ஆராய்ச்சிக்கும் சரித்திர ஆராய்ச்சிக்கும் மிகஇன்றியமையாதது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா 10-0-0

இராஜசுந்தரம்.

ஒரு நவீனகம். இனிய எளிய நடையில் எழுதப் பெற்றது. விலை ரூபா 0-8-0

தினகரமாலை யென்னும்-தினகர வெண்பா

திருக்குறளின் அதிகாரத்திற் கொரு வெண்பாவாக 133 வெண்பாக்களைக் கொண்டது. இது ஒரு பண்டை நூல். இதைப் பதிப்பித்தவர் ஸ்ரீமான் S. வையாபுரி பிள்ளை, B.A., B.L.,
விலை அணு 0-6-0

கலாநிலயம் ஆபீஸ், வேளாளர் தெரு, புரசை, சென்னை.

ANCIENT JAFFNA

MUDALIAR C. RASANAYAGAM C.C.S.

An authentic history of North Ceylon, Particularly of Jaffna based on archeological Epigraphic and linguistic researches is stated here in a connected manner from ancient times up to the occupation of the Island by the European Professor. S. Krishnasamy Iyengar has given an appreciative foreword.

PRICE Rs. 5-8-0.

KALANILAYAM

PURASAWALKAM :: VEPERY, MADRAS.

ஏமாங்கதத் திளவரசன்

ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் B.A., B.L.,
எழுதியவோர்

செந்தமிழ்க்காதை.

கலாநிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை. விலை ரூ. 1—4—0

கலாநிலயம் 1930-வது வருடம் 3-வது வால்யூம்.

தலையங்கங்கள்:—அறியாமை வேண்டப்படும் 4. சுயநலச்சோதனை 8. விஷபத்திற்கேற்ற விளம்பரம். முயலுக்கு முயலவேண்டா. விளம்பினல் வெட்கக்கேடு. கல்லாதபேர்களே நல்லவர்கள் 3. நாணத்தால் நைவார்திறம். வாலின் நீளம். பெருமையின் பெருமை...முதலிய கட்டுரைகள் ஐம்பது, உலகியலோடு வாழ்க்கையின் தத்துவத்தை விளக்குவன.

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) அயோத்தியா காண்டம் முதலிரண்டு படலங்களின் விளக்க ஆராய்ச்சி அரசியலுக்குரிய அறங்களில் திருவள்ளுவர் வேதவியாசர் முதலானோர்க்கும் கம்பருக்கும் உள்ள வேறுபாடு 25-கட்டுரைகளில் விளக்கப்பட்டுளது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் வரைந்துள, "தசரதன் குறையும் கைகேசி நிறையும்" என்னும் நூலிற்கூறிய பொருளும் முடிவும் கம்பருடைய கருத்திற் கொவ்வாதன வென்று 25-கட்டுரைகளில் வாதிக்கப்பட்டிருக்கின்றது.

குறுந்தொகை:—(K. இராமரத்நம் ஐயர், B. A) புத்தகமாய் இப்பொழுது கிடைக்காத இச்சங்கநூற் செய்யுள் நானூறும் விளக்கமான உரையுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

அப்பர்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் அறுபத்துநான்கு கலைகளையறிந்து கையாண்ட பெருமை விளக்கப்பெற்றிருக்கின்றது.

இலஞ்சிப்பாவை:—(T. S. நடராஜபிள்ளை, B A. B. L.) Sir Walter Scott என்பவர் ஆங்கிலத்தில் பாடிய Lady of the Lake என்னும் காவியத்தைத் தழுவி எழுதிய கதை.

மானத சாத்திரம்:—(T. P. மீனாக்ஷிசுந்தரம் M. A., B. L.) ஆங்கிலமுறையைத் தழுவி, நடத்தை, உணவு நாட்டம், அழுகை, சிரிப்பு, தன்னெடுப்பு, தன்னொடுக்கம், புணர்ச்சி, இணைவிழைச்சி, விளையாட்டு முதலியவைகளின் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன.

தமிழ்ப் பாடம்:—வில்லிபாரதம் கிருஷ்ணன் தூதுச் சருக்கமும், அஷ்டப்பிரபந்தமும் போதிப்பதுடன், புணரிலக்கணம் முழுவதும் தெற்றென விளக்கப்பெற்றிருக்கின்றது.

நம்மாழ்வார் வைபவம்:—(K. இராஜகோபாலா சாரியார், B. A. B. L.) விளக்கமான ஆராய்ச்சியுடன், 2-ம்பத்து 6-ம் தசகம் வரையிலும்.

இவைகளைத் தவிர, ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த கட்டுரைகளும், ஆச்சரிய சூடாமணி என்னும் வடமொழி நாடக மொழிபெயர்ப்பும், சிலப்பதிகாரக் கானலவரியை அழகுற விளக்கிய 'மாதவி மாதவம்' என்னும் கட்டுரைகளும், தனிப்பாடல்களும், அண்டபுராண ஹாஸ்யப் பாடல்களும், நாயன்மார் சரித்திர உண்மைபோன்றபல கட்டுரைகளும் நிறைந்துள.

1931-வது வருடம் 4-வது வால்யூம்.

தலையங்கம்:—அகமே புறம், வாழ்வாங்கு வாழ்பவர் 10. உண்மையில் உழல்வார் திறம் 5. மெய்ம்மையை அலமரச் செய்யலாமோ 4. அருமையினு மருமை 4 மறப்பது முறுதியாமே. நள்ளாள் நகை 4. முதலிய கட்டுரைகள் 50.

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B A. B. L.) கைகேசி சூழ்வினைப் படலம் முதல் அயோத்தியாகாண்டம் இறுதியாக 50 கட்டுரைகளில் ஆராயப்பெற்றிருக்கின்றது.

சூளாமணி:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) இதுகாறும் உரை யெழுதப்பெறாத இந்நூல், உரையுடன் பதிப்பிக்க ஆரம்பமாகி இவ்வாண்டில் ஐந்நூறு செய்யுள்கள் வந்துள.

யாப்பிலக்கணம்:—உறுப்பியலும், செய்யுளியலில் பாக்களின் இலக்கணமும்.

அப்பர்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L) அப்பர் 64 கலைகளைக் கையாண்ட பெருமை விரிவாக வரையப்பட்டிருக்கின்றது.

ஆண்டாள்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) ஆண்டாள் பிறப்பு, இளமை, கல்வித்திறம், அனுபவம், யௌவனம், மதம், சித்தாந்தம், முத்தி முதலியவைகளின் உண்மை.

மானத சாத்திரம்:—(T. P. மீனாக்ஷிசுந்தரம், M. A. B. L.) புலன்களின் அமைப்பும், உணர்வு முதலியவைகளின் தத்துவமும் விளக்கப்பெற்றுள.

பிஷாரோ நாடகம்:—ஆங்கிலப்புலவர் R.B. Sheridan எழுதிய நாடக மொழிபெயர்ப்பு.

நவராத்திரி நாடகம்:—(K. N. சுந்தரேசன், B. A. Hons) ஓர் நவீன நாடகம்.

சிதம்பரதேவர் சரிதம்:—(Dr. V. S. அருணாசலம் பிள்ளை) முத்தியில் மனம் வைத்து உலகத்தில் விவகரிப்பார் பெருமையை உட்கொண்ட வோர் நாவல்.

களவியற் காரிகை:—(S வையாபுரிப்பிள்ளை, B. A. B. L.) இதுகாறும் அச்சேறாத நூல். அகப்பொரு ளிலக்கணத்தின் சிறப்பை விளக்கவல்லது.

கந்தபுராணமும் சங்க நூல்களும்:—(பண்டிதர், திம்மப்பா ஐயர்) கந்தபுராணத்தைச் சங்கநூல்களோடு ஒப்புநோக்கி ஆராயம் கட்டுரைகள்.

இவை தவிர, மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், தமிழிரட்டையர், முதலிய கட்டுரைகள் பல.

ஒவ்வொரு வால்யூமிற்கும் விலை வருமாறு:— பைண்ட் செய்யாதது ரூ. **7 8 0**
காலிகோ கில்ட் பைண்ட் ரூ. **8 8 0** ஆப்லெதர் கில்ட் பைண்ட் ரூ. **9 0 0**

இவ்விலையில் தபால் அல்லது இரயில் சார்ஜ் அடங்கவில்லை. இந்தியாவில் உள்ளவர்கள் இரயில்வே பார்ஸல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். To Pay போட்டு அனுப்புவோம். எழெட்டெணுக்களுக்கு மேல் இரயில்வே கட்டணம் ஆகாது. பர்மா, சிலோன் இவ்விரண்டு இடங்களுக்கும் ரயிலில் அனுப்பமுடியாதாகையால் விலையுடன் தபால் பார்ஸல் சார்ஜ் ரூ. 2—4—0 சேர்த்தனுப்பவேண்டும். மலேயே, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளில் இருப்பவர் தபால் சார்ஜிக்கு ரூ 3. சேர்த்தனுப்பவேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயலாது. முன்பணம் அனுப்பி எழுதல் வேண்டும்.

வர்த்தமானம்

நமது மதம்:-இம்மாதம் 12-ந்தேதியன்று, மயிலாப்பூர் சமிஸ்கிருத கலாசாலையில் ஸ்ரீ ஜகத்குரு சங்கராசாரியார் ஸ்வாமிகள் அருளிய உபந்நியாசச் சுருக்கம் வருமாறு:—

"உலகத்தில் ஏற்பட்டுள்ள மற்றெல்லா மதங்களும் மனிதனதுபெயரைக்கொண்டுவிளங்குவனவாக,நமது மதத்திற்கு எப்பெயரும் இருக்கக் காணோம். இந்து மதம் என்ற பெயரோ மேல்நாட்டாரால் கொடுக்கப்பட்ட பெயராகும். நிற்க, வேதப்பிரமாணப்படி நடப்பவர்களே இந்துக்கள். வேதப்பிரமாணமே நமது மதத்தின் சின்னம். அவ்வேதம் எப்பொழுது ஏற்பட்டது என்று அதன் காலஅளவை நிர்ணயிக்கமுடியவில்லை. மற்ற மதங்களின் காலத்தை அதனை ஸ்தாபித்தவர் காலத்திலிருந்து கணக்கிட்டு வரையறுத்துவிடலாம். கிறிஸ்துமதம்ஏற்பட்டு இன்றைக்கு 1932வருடங்கள் ஆகின்றன. கிறிஸ்தவ மதத்திற்கு முன் புத்தமதம் தோன்றிற்று. இந்தப் பேருடைய மதங்களுக்குமுன்னரும் ஆன்மகோடிகள் இருந்தனர். அவர்கள் சிரேயசையடைய, அதாவது மோட்சம் அடைய, மதமில்லாமலா இருந்தது. கிரிஸ்தவமதத்திற்கு முன்னரும் பெரிய நாகரிகத்தோடு எகிப்து நாடும் கிரேக்க நாடும் இருந்தன. இக்கப் பெரிய நாகரிகங்கள் 5000 அல்லது 6000. வருடங்களுக்கு முன்தோன்றியவை என்று சரித்திரகாரர்கள் கூறுகின்றனர். அதற்கு முன்னரும் ஜாவா சுமத்ரா ஆஸ்திரேலியா முதலிய விடங்களிலிருந்து, அகப்பட்டுள்ள பல சிலாசாஸனங்களிலிருந்து, 5000, 6000 வருடங்களுக்கு முன்னரே மக்களும் நாகரிகமும் இருந்தனவென்று ஏற்படுகின்றது. அச்சிலா சாஸனங்களும் சமிஸ்கிருத பாஷையில் இருக்கின்றன.

நமது வேதமதம் இந்தியாவின் மதம்மாத்திரமன்று. வெளி நாடுகளிலும் இவ்வேத மதம் ஒரு காலத்தில் பரவியிருந்தது. அமெரிக்காவிலுள்ள மெக்ஸிகோவில் இருந்த ஒரு பழைமையான ஜாதியார் ஆஸ்டிக்ஸ்என்னும்பெயரை உடையவர். ஆஸ்டிக்ஸ் என்னும் பதத்திற்குஆஸ்திகர் என்பது பொருள். பெரு நாட்டில் இருந்தவர் சூரியர்கள் என்னும் பொருளுடைய பெயரைக் கொண்டவர். கலிபோர்னியா என்னும் பெயர் கபிலாரண்யம் என்னும் பதத்தின் மரூஉ. அதற்கு அருகில் ஆஷ்தீவு, ஹார்ஸ்தீவு என்னும் பெயர்களுடைய தீவுகள் இருக்கின்றன. நீற்றுத்தீவு குதிரைத் தீவு என்ற பொருளுடையன அவை. இவைகள் பகீரதன் கங்கை கொண்டுவந்த கதையை நமக்கு ஞாபகமூட்டும். மெக்ஸிகோ நாட்டில் நடக்கும் ஒரு உற்சவம் ராம்சீதா உற்சவம் என்று இன்னும் அழைக்கப்படுகின்றது. இன்னும் பல விடங்களிலும் நமது நாட்டுப் பெயரும் நாகரிகசின்னங்களும் இருக்கின்றன. முக்கியமாய் ராமநாமம் எங்கும் பரவியுள்ளது. எனவே நமது மதமும் நாகரிகமும் பிரபஞ்ச முழுவதும் பரவியிருந்தன என்று ஏற்படுகின்றன. பின்னால் ஏற்பட்ட மதங்கள் எல்லாம், நமது பெரிய மதத்தின் அம்சங்களேயாகும்.

பிரபஞ்சத்தில் ஒரு பெரிய தீபம் இருக்கின்றது. அதுவே நமது மதம்; அதைச்சுற்றி ஒருதிரை போட்டுவிட்டால் திரைக்கு வெளியிலிருப்பவர்களுக்கு இருட்டு ஏற்படுகின்றது. இருட்டை அகற்றத் திரையில் சிறு துவாரங்கள் இடப்பெறுகின்றன. ஒவ்வொரு துவாரத்தின் வழியே நோக்குபவர் அதுதான் வெளிச்சம் என்று கூறுகின்றார்கள். இத்திரையை நீக்கிவிட்டால் ஒரே ஜோதி எல்லோருக்கும் விளங்கும். அந்த ஜோதிதான் நமது மதம்; அதைச் சூழ்ந்துள்ள அஞ்ஞானந்தான் இந்தத் திரை. இப்பொழுது அந்த அஞ்ஞானத்திரையை அகற்றுவதே நமது கடமை.

புத்தக வரவு:—கீழச்சிவற்பட்டி வாசியான சான்டோர். மு. லெ. சோமசுந்தரம் செட்டியார். அவர்களால் இயற்றப்பட்டு, கொப்பனாபட்டி P. L. A. மெய்யப்ப செட்டியார் பொருளுதவிகொண்டு பிரசுரிக கப்பெற்ற, பெண்கள் உடற்பயிற்சி என்னும் புத்தகம் வரப்பெற்றோம். பெண்கள் உடற்பயிற்சி செய்யவேண்டிய அவசியத்தை விளக்கியிருப்பதோடு, அவர்களுக்குரிய அப்பியாசங்களும் படங்களுடன் வரையப்பெற்றிருக்கின்றன. புத்தகம் வேண்டுவோர் இதன் ஆசிரியரான மு. லெ. சோமசுந்தரஞ் செட்டியாரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். விலை விவரம் தெரியவில்லை.

***

கதர்: —அகில இந்திய நூற்போர் சங்கத்தின் தமிழ் நாட்டுக் கிளைச்சங்க மானேஜர் ஸ்ரீமான் என். எஸ். சாரியார் எழுதுகிறார் :—

மாதம் 2 லட்ச ரூபாய் பெறுமானமுடைய கதர், தமிழ்நாட்டு நூற்போர் சங்கத்தாரால் உற்பத்தி செய்யப்படுகிறது. 31,393 பேர் நூற்போர்களும் 2199 பேர் நெசவுத்தறிக்காரர்களும் வேலை செய்கிறார்கள். போன வருஷம் அகில இந்திய நூற்போர் சங்கம் நூற்பவர்களுக்குக் கொடுத்த மொத்தச் சம்பளம் 2,90,764 ரூபாய். பருத்திக்காக விவசாயிகளுக்குப் போய்ச் சேர்ந்தது 2 லட்சத்துக்கு அதிகம். சாயந் தோய்த்தல், அச்சு வேலை, சலவை முதலிய வேலையாளர்களுக்கு 75,000 ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. அகில இந்திய நூற்போர் சங்க ஸ்தாபனங்களின் மொத்தக் கதர் உற்பத்தி 10 லட்சம் ரூபாய் மதிப்பு. ஏற்கனவே கதருக்குக் கொடுக்கும் பணத்தில் 100க்கு 80 பாகம் ஏழைகளுக்குப் போய்ச்சேருகிறது. வர வர அதிகமான ஆதரவு பொது ஜனங்களிட மிருந்து எதிர்பார்க்கப்பட்டிருக்கிறது. இந்த வருஷம் கதர் விற்பனை குறைந்திருக்கிறது. நூற்பவர்களும் தறிக்காரர்களும் பாதியளவுகூட வேலைசெய்யமுடியவில்லை. இது துக்ககரமான விஷயம். இவ்வாண்டு தீபாவளிக்குக் கதரே வாங்குவதென்று பொதுஜனங்கள் மனம் வைத்தால் இந்நிலைமை தீர்ந்துவிடும்.

***

அயர்லாந்து நிலை:—அயர்லாந்திற்கும் பிரிட்டனுக்கும் நிலவரி ஒப்பந்த விஷயமாய் ஏற்பட்ட மனஸ்தாபம் வளர்ந்தே வருகின்றது. ஐரிஷ் குடியரசுக் கட்சித் தலைவருக்கும், பிரிட்டிஷ் மந்திரிகளுக்கும் இடையில் நடந்த மத்யஸ்த முயற்சி பயன்படவில்லை. டி. வாலரா கட்சியினர் பிடிவாதமாயிருக்கின்றனர். அயர்லாந்து பிரிட்டிஷ்சாம்ராஜ்பத்திலிருந்து விலக்கிக் குடியரசு நாடாய் மாறிவிடவேண்டும் என்னும் எண்ணம் அயர்லாந்து அமிதவாதிகளினிடம் வளர்ந்து வருகின்றது என்று தெரிகின்றது.

***

வேலை நிறுத்தம்:—பெரம்பூர் எம் எஸ் எம் ரயில்வே ஒர்க்ஷாப் தொழிலாளர்கள் அக்டோபர் மாதம் 24-ந் தேதி காலை வேலை நிறுத்தம் செய்தனர். ஆனால் ஆங்கிலோ இந்திய வேலையாளர்கள் காலையில் வேலை நிறுத்தத்தில் சேரவில்லை. பகல் 12க்கு மேல் லோகோ ஒர்க்ஷாப்பில் வேலை செய்யும் ஆங்கிலோ இந்தியர்களில் 50பேர் வேலை நிறுத்தத்தில் சேர்ந்துகொண்டனர். ரயில்வே கம்பெனியார் சிக்கனத்தை ஒட்டிச் சென்றவாண்டு 93 பேர்களை வேலையினின்று விலக்கினர். அது விஷயமாய் ஒரு வருடமாகத் தொழிலாளர் சங்கத்திற்கும், அதிகாரிகளுக்கும் பேச்சு நடந்துவந்தது. முடிவாக அதிகாரிகள் அவர்களை வேலையில் சேர்த்துக் கொள்ளமுடியாது என்று கூறினர். இதுவே வேலை நிறுத்தத்திற்குக் காரணம் என்று தெரிகிறது.

KALANILAYAM
Reg. No. M. 2324.

— கம்ப ராமாயணம் —

பதவுரை விரிவுரை விளக்கம் இலக்கணக் குறிப்பு முதலியவைகளுடன்

வை. மு. சடகோப ராமாநுஜாசாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்
வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார்.

ஆசியவர்களால் பதிப்பிக்கப் பெற்றவை.

பால காண்டம்	ரூ.	5	0	0
அயோத்தியா காண்டம்	,,	5	0	0
ஆரணிய காண்டம்	,,	4	0	0
கிட்கிந்தா காண்டம்	,,	4	8	0
சுந்தர காண்டம்	,,	5	0	0
யுத்த காண்டம்—2 பாகம்	,,	10	0	0

தபால், அல்லது இரயில் பார்ஸல் கட்டணங்கள் வேறு. வேண்டுவோர், தாம் வேண்டும் புத்தகங்களுக்குரிய விலையில் பாதியாவது முன்பணம் அனுப்பி ஆர்டர் செய்யவேண்டும். மற்றதை வி. பி. மூலம் பெற்றுக்கொள்வோம்.

மானேஜர் :— கலா நிலயம், வேளாளர் வீதி, புரசை, சென்னை.

:: அமிர்த சாகரம் ::

தேக பலத்தையும், ஞாபகவிருத்தியையும், புஸ்த் வத்தையும், கொடுப்பதில் எங்கள்

அமிர்தார்ணவ லேகியம்

அமிர்தசாகரம் போன்றது. மேலும், நீடித்த தலைவலி, மண்டை இடி, மாரபு வலி, தேகச் சூடு முதலிய வியாதிகளைக் கரஸ்தமாகக் கண்டிக்கும். 20-தோலா லேகியம் கொண்ட டப்பி 1-க்கு ரூபா 2.

இனும்! ஆரோக்கிய கிரந்தம் இனும்!

கேட்போருக்கு இனாமாகவும், தபாற்செல வில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

கற்பக மலர் (சிறு கதைகள்)
(ஆசிரியர் - சகோதரி வி. பாலம்மாள்)
மலர் 1 - விருந்தில் விலங்கு - விலை அணு 3.
மலர் 2 - அவள் இஷ்டம் - விலை அணு 3.
ஏழணு ஸ்டாம்புக்கு 2-புத்தகங்கள் அனுப்பப்படும்.
ஸ்ரீமதி பிரசுராலயம், மயிலாப்பூர், சென்னை.

பாரத வசனம்.

ஆதிபர்வம் 3-8-0. ஸபா, ஆரண்ய, விராட பர்வங்கள் அடங்கியது நுபா 5-0-0. உத்தியோக, பீஷ்ம, துரோண, கர்ண சல்லிய, ஸவுப்திக பர்வங்கள் அடங்கியது 5-0-0. சாந்தி, அநுசாசனிக, அச்வமேத, ஆச்ரமவாஸ, ஸ்வர்க்காரோஹண, முசல, மஹாப்ரஸ்தானிக பர்வங்கள் அடங்கியது 5-0-0.

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை
வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்

NATIONAL INSURANCE COMPANY, LIMITED.

Head Office:
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

New Policies Issued in 1931 for over	Rs. 1,32,33,000
Showing an increase over the New Business figure for 1930 of	16.54 %
Claims paid up to end of 1931 over	Rs. 90,00,000
Invested Funds amount to over	Rs. 1,75,00,000

LOW RATES — LIBERAL CONDITIONS
NEW TABLES — NEW BENEFITS

For particulars & Agencies please write to:—

R. G. DAS & Co., *Managers.* OR The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras.

FIRE & ACCIDENT RISKS

covered by
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)